# சீனப்பிரதமர் சூ-என்-லாய் ஸ்ரீமாவுக்குப் பாராட்டு!

Registered as a NewsPaper in Ceylon     விலை சதம் 15 ★ ☆

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 112
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் வைகாசி 20   ரபி. அவ் 27   புதன்கிழமை   [3 6-70]

ஈழநாடு சந்தா

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| 1 வருடம் | ரூ. 66-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும். தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# ஸ்ரீமாவோ அரசாங்கத்தை தமிழரசுக்கட்சி ஆதரிக்கும்

## வகுப்புவாதத்தை நீக்கி தேசீய ஒற்றுமைக்கு உழைத்தால்!

யாழ்ப்பாணம், புதன்

திருமதி ஸ்ரீமாபண்டாரநாயகா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் சோஷலிஸக் கொள்கையை இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆதரிக்குமென்று அறியப்படுகிறது. இன்றுள்ள நிலைமையில் திருமதி. பண்டாரநாயகாவின் அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுப்பதைத்தவிர வேறுவழியில்லையென்றும் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சில ஆட்சிமன்றப் பிரதிநிதிகள் கருதுகின்றனராம்.

தமிழரசுக் கட்சிப் பிரமுகரும் திரு. டட்லியின் தேசிய அரசாங்கத்தில் உள்ளூராட்சி அமை...



...ய்ந்து முடிவுசெய்யவிருக்கி[illegible] தெரிகிறது ஐக்[illegible]ன்னணி அரசாங்கத்தின் [illegible]சாஷலிஸக்கொள்கையைத் தமிழ்அரசுக்கட்சி ஆதரிக்கவேண்[illegible] யத்தை அந்த[illegible] உடுவில் பிரதிநிதி திரு. விதர்மலிங்கமும் பருத்[illegible] துறைப் பிரதிநிதி தி[illegible]. துரைரத்[illegible]னமும், வற்புறுத்துவார்கள் என்று அறியப் [illegible] (4-ம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய முன்னணி அரசை யு. என். பி வாழ்த்துகிறது!

கொழும்பு, செவ்

ஐக்கிய தேசியக்கட்சி திருமதி ஸ்ரீமாவோ அரசாங்கத்துக்கு தனது நல்வாழ்த்துக்களைத்தெரிவித்திருப்பதுடன் அரசின் முன்னேற்றமான திட்டத்துக்கு முட்டுக்கட்டையாக தமதுகட்சி இருக்மாட்டாது என்று தேரிவித்துள்ளது.

யு என் பி இன்று அறிக்கையொன்றைவெளியிட்டிருக்கிறது அவ்வறிக்கையில், 'இந்நாட்டு மக்கள் திட்டவட்டமாக தமது முடிவை இப்பொதுத்தேர்தலில் தெரிவித்திருக்கிறார். மக்கள் தீர்ப்பை நாம் மதிக்கிறோம். அவர்களுடன் நாமும் சேர்ந்து வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இ. தொ. கா.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஸ்ரீமா அரசுக்கு நிபந்தனையுடனான ஆதரவை நல்குவதாக தெரிவித்துள்ளது.

## ஸ்ரீமாவோ அமைச்சரவை இன்று கூடுகிறது

கோட்டை, செவ்

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவின் தலைமையி... கிய வாக்குறுதியாக அளித்த இரண்டு கொத்துஅரிசி முக்கியபிரச்னையாக அமைச்சர...

## உலகெங்குமிருந்து செய்திகள் குவிகின்றன

கோட்டை, செவ்.

'ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்தியில் இலங்கை மக்கள் பெரும் நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதை நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன இலங்கையில் பெரும்பான்மையினோர் ஏகாதிபத்தியத்தை வெறுத்துள்ளனர் என்பதை இந்த வெற்றி உலகிற்கு விளக்கியுள்ளது. எனது அரசாங்கத்தின் மனப்பூர்வமான பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்'

இவ்வாறு நவசீனப் பிரதமர் சூ-என்-லாய் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு அனுப்பிவைத்துள்ள பாராட்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டதைப் பாராட்டி உலக நாடுகளிலிருந்து மேலும் பல பாராட்டுச் செய்திகள் வந்து கொண்டேயிருக்கின்றன.

சீனப் பிரதமர் அனுப்பிவைத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'இலங்கை மக்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளில் அயரா நம்பிக்கை வைத்துள்ளனர். ஏகாதிபத்தியத்தை ஒழித்துக்கட்டுவதில் இலங்கை மக்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர் என்பதை தேர்தல் முடிவு காட்டுகிறது. இலங்கையின் புதிய அரசாங்கம் நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்றவும் முதலாளித்துவத்தை ஒழிப்பதிலும் அக்கறைகாட்டும் என எதிர்பார்க்கிறோம்

மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ர்ஹ்மான், இத்தாலியப் பிரதமர் ஆகியோர் அனுப்பிவைத்துள்ள செய்தியில், தங்களினது தனிப்பட்ட பாராட்டுதல்களையும், தமது நாட்டு மக்களினது பாராட்டுதல்களையும் தயவுடன் ஏற்றுக்கொள்ளுமாறு தெரிவித்துள்ளனர்.

கயானாவின் இடதுசாரி எதிர்க்கட்சித்தலைவர் டாக்டர் செட்டி ஜகன் அனுப்பிவைத்துள்ள செய்தியில், இலங்கையில் இடதுசாரிக் கூட்டணி அடைந்த வெற்றி உலகெங்கும் சோஷலிஸத்திற்குக் கிடைத்த வெற்றி என்று கூறியுள்ளார்.

ஏகாதிபத்தியம் உண்மையான எதிரி என்பதை இலங்கை மக்கள் இனம் கண்டுகொண்டு ஒதுங்கிவிட்டனர் என்று அவர் தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்'

வடகொரியா பிரதமர் திரு கிம் இல் சுங் அனுப்பியுள்ள செய்தியில், சுதந்திரமான சுயாதிபத்தியமிக்க ஒரு நாட்டை உருவாக்குவதற்கு சோஷலிஸம் தான் ஒரே வழி என்பதை இலங்கை மக்கள் உணர்ந்து தீர்ப்பளித்துள்ளனர்' என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளுக்குக் கொடுக்கப்பட்ட...

## 'அடக்கப்பட்டோருக்கு கிடைத்த வெற்றி'

கம்புறுப்பிட்டியா, செவ்

''அடக்குவோருக்கும் அடக்கப்பட்டோருக்குமிடையே நடைபெற்ற போராட்டத்தில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் போராடிய அடக்கப்பட்டோர் பெரும் வெற்றி அடைந்தனர். இந்நிகழ்ச்சி வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியது என இகலவித்தியாவிலுள்ள பண்டாரவத்தையில் கம்புறுபிட்டியா கம்யூனிஸ்ட் எம். பி. திரு. அலியன் நாணபக்காரா கூறினார்.

திரு. நாணயக்காரா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது. திரு எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயக்கா 1956-ல் அடைந்த வெற்றியிலும் பார்க்க நாம் மிகவும் பெரும் வெற்றி அடைந்திருக்கிறோம். இவ்வெற்றியை கடந்த 5 ஆண்டுகளில் அடக்கப்பட்டு வேதனைப்பட்ட ஏழை மக்களே எமக்களித்தனர். அவர்கள் எங்களை அனுப்பியதன் நோக்கம் தங்கள் வாழ்வை வளப்படுத்தவும் மகிழ்ச்சியுறச் செய்யவுமேயாகும்.

தன்னோடு ஒத்துழைத்த மக்களுக்கு இறுதியில் அவர் நன்றி தெரிவித்தார்''.

## ராக்கெட் ஓசை பேர்முடா தீவில் பதிவு

நியுயோர்க், ஜூன் 2

கென்னடி முனையிலிருந்து 'அப்பல்லோ' ஏவப்பட்ட 17 நிமிஷம் கழித்து பெர்முடா மீது 116மைல் உயரத்தில் அது செல்லும்போது வெற்றிடத்தில் விண்வெளிக்கப்பலை 'ருக்கெட்டு'கள் உந்திச் சென்றபோது அவற்றிலிருந்து ஒலி அதிர்வுகள் கிளம்பி பெர்முடா தீவில் உள்ள நிலையத்தில் பதிவாகியிருக்கின்றன.

சென்றவருடம் நவம்பர் 16-ந் திகதியன்று 'அப்பல்லோ-12' ஏவப்பட்டபோதும் இந்த வருடம் ஏப்ரல் 11-ந் திகதியன்று 'அப்...

இந்த விசித்திர சம்பவத்தை அவதானித்த பெர்முடா விண்வெளி கண்காணிப்பு நிலையத்தின் ஆராய்ச்சியாளர் டாக்டர் வில்லியம் டான் கீழ்க்கண்டவாறு தெரிவித்தார்.

''காற்று மண்டலத்தின் ஒரு பகுதியின் தன்மையைப் பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டியது ஏராளமிருக்கிறது என்றுதான் இந்த விசித்திர சம்பவம் உணர்த்துகிறது''.

## தலை மொட்டை அடித்தனர்

கொழும்புத்துறை செவ்

தாம் ஆதரித்து வந்த கட்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று கூடுகிறது

கோட்டை, செவ்

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவின் தலைமையிலான ஐக்கிய முன்னணியின் 21 பேர் கொண்ட அமைச்சரவை இன்று காலை கொழும்பில் கூடுகிறது

தேர்தலுக்கு முன்பாக கூட்டணியினர் மக்களுக்கு முக்கிய வாக்குறுதியாக அளித்த இரண்டு காத்து அரிசி முக்கிய பிரச்னையாக அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது

இம்மாதம் 7ந் திகதி ஆட்சி மன்றம் கூடும். அப்போது சபாநாயகர் தெரிவுசெய்யப்படுவார்.

## தேரோவுடன் நால்வர் கைது!

### கைக்குண்டு வைத்திருந்தார்களாம்

கொழும்பு, செவ்,

தேவபொட்டாவ வணக்கத்துக்குரிய அமரவின்ச தேரோவுடன் மற்றும் நால்வரை இன்று நீர்கொழும்பு பொலிசார் கைது செய்தனர்.

பதினன்கு கைக்குண்டுகளை வைத்திருந்ததாக இவர்கள் கைதுசெய்யப் பட்டனர்.

அரசாங்க ரசாயன பரிசோதனைக்கு இந்தக் கைக்குண்டுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

தேரோ உட்பட மற்றும் நால்வரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்

இதுசம்பந்தமாக தொடர்ந்து தீவிர புலன்விசாரணை நடக்கின்றது

### புதிய தபால் மந்திரி

## குமாரசூரியர் எம். பி.

### பதவியை ராஜினமா செய்வார்

### செனட்டராக நியமிக்கப்படுவார்

கொழும்பு. செவ்

ஐக்கியமுன்னணி அரசின் தபால் அமைச்சர் திரு செல்லையா குமாரசூரியர் நியமன எம் பி பதவியை ராஜினமா செய்வார். அவர் செனட்டராகநியமிக்கப்படுவார்.

இலங்கை அரசியல் சாசனத்தின் 48வது பிரிவின்படி செனட்சபையிலிருந்து நீதி மந்திரியும் மற்றுமொரு மந்திரியும் நியமிக்கப்படவேண்டும் ஆனல் தற்போதைய புதிய மந்திரிசபையில் நீதி மந்திரி ஒருவரே செனட்டிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளதால், நியமன எம் பி யாக்கப்பட்டு மந்திரிப் பதவி ஏற்றுள்ள மூவரில் ஒருவரான தபால் மந்திரி திரு. ஸி குமாரசூரியர் நியமன எம். பி. பதவியை ராஜினமாச் செய்துவிட்டு, செனட்டராக்கப்படவுள்ளார்.

இவரின் இடத்துக்கு நியமன எம் பி. யாக நீர்கொழும்பு முன்னுள் மேயர் திரு ஜோன் றெரட்றிகோ நியமிக்கப்படவுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### ராஜினமா!

கொழும்பு, புதன்

விவசாயப்படைகமிஷனர் காப்டன்செனிவரத்னதமது பதவியிலிருந்து ராஜினமாச் செய்துள்ளார்

### தேடப்பட்ட 'ஆசாமி றிமான்டில்!

யாழ்ப்பாணம், புதன்

திருட்டு சம்பந்தமாக தேடப்பட்டுவந்த 'ஆசாமி' பொலிசாரிடம் அகப்பட்டார். களவு சம்பந்தமாகத் தேடப்பட்டுவந்த இளையவன் செல்லன் என்பவரை யாழ்ப்பாணம் பொலிஸ்குற்றப் பகுதியைச்சேர்ந்த நஇ இரத்தினம் கைது செய்து யாழ். மாஜிஸ்டிரேட் முன் ஆஜர்செய்தார். இம்மாதம் 5ந திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார். மாதா மாதம் இவர் ஏற்கனவே குற்றம் செய்ததாக பொலிஸில் சென்று கையெழுத்திட்டு வந்தவர் [குவிம;

### இன்று

யாழ்ப்பாணம், புதன்

வில்லூன்றி விநாயகர் ஆலய தீர்த்தோற்சவ விழாவும் யாக கும்பாபிஷேகமும் இன்றுபகல் நடைபெறும். மாலை துவாஜாவரோகணத்துடனும் சண்டேசுரர் உற்சவத்துடனும் திருவிழா நிறைவுறும்.



பிரமுகரும திரு. டட்லியின் தேசிய அரசாங்கத்தில் உள்ளூராட்சி அமைச்சராக இருந்தவருமான செனட்டர் எம். திருச்செல்வம் சமீபத்தில் விடுத்த அறிக்கையிலிருந்தும் உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் சில தினங்களுக்கு முன்வெளியிட்டிருந்த கருத்திலிருந்தும் திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் அரசாங்கத்துக்கு தமிழ் அரசுக்கட்சி ஆதரவும் ஒத்துழைப்பும் அளிக்குமென்றே எதிர்பார்க்கப் படுவதாக அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

இம்மாதம் 6-ம் திகதி கொழும்பில் திரு. செல்வநாயகம் வீட்டில் நடைபெற விருக்கும் தமிழரசுக் கட்சி ஆட்சிமன்றக் குழுக் கூட்டத்தில் தமிழ் அரசுக் கட்சி இனி என்னவிதமான போக்கைப் பின்பற்றவேண்டுமென்பது பற்றியும் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதுபற்றிஆரா

...தின் சோஷலிஸக்கொள்கையைத் தமிழ்அரசுக்கட்சி ஆதரிக்கவேண்டிய அவசியத்தை அந்தக் கூட்டத்தில் ஆரைரத் ...வரும், வற்புறுத்துவார்கள் என்று அறியப்படுகிறது.

(4-ம் பககம் பார்கக)

## "கல்விச் சீர்திருத்தத்திற்கு ஆலோசனைகள் தருக"

### கல்வி அமைச்சர் அறிக்கை

கொழும்பு, செவ்வாய்

இன்றைய இளம் சந்ததியினரை நாளைய தலைவர்களாக மாற்றுவது நாட்டின் கல்வி நிறுவனங்களாகும். ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் பிரச்னைகளும் குறைகளும் அனுதாபத்துடன் ஆராயப்படும் எனக் கூறிய கல்வி மந்திரி ஜனுப் பதியுதின் மக்முத் ஆசிரியர்களையும், மாணவர்களையும் தம்முடன் ஒத்துழைக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் கூறிஉள்ளதாவது:

கல்வித்துறையில் உள்ள சீர்கேட்டை நீக்காவிட்டால் விவேகமான மாணவர் சமுதாயம் குருடாகவோ அன்றி கர்வம் மிகுந்ததாகவோ இருந்துவிடும்.

ஆசிரியர் விரிவுரையாளர்கள் கல்விமான் ஆகியோரிடமிருந்து ஆலோசனைகள் கல்விமுறையை சீர்திருத்துவதற்காக வரவேற்..ப்படுகின்றன.

ஆசிரியர்களும் மாணவர்களும் ஒப்பீட்டடிப்படையில் குறைந்தஅளவு எண்ணிக்கையைக் கொண்டிருப்பினும் எதிர்கால இலங்கைக்கு தோள் கொடுப்பவர்களும் உண்மையான பொறுப்பைக் கொண்டிருப்பவர்களும் அவர்களே ஆகும்.

இன்றைய இளம் சிறுர்கள் நாளைய தலைவர்களாக மாற்றக் கூடியதாக கல்விநிலையங்கள் இருக்கவேண்டும் என விரும்புகின்றேன்.

## ஐக்கிய முன்னணி அரசாங்க

### அமைச்சர்கள் ஆக்கத் திட்டங்கள்

கோட்டை, செவ்.

ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் புதிய அமைச்சர்கள், தமது இலாகாக்களில் வேலைகளை செம்மைப்படுத்தும் திட்டங்கள் இட்டுவருகிருர்கள். தங்கள் இலாகாக்களின் செயல்கள் அனைத்தும் பொதுமக்களுடைய நலனை அடிப்படையாகக் கொண்டதாக அமையவேண்டுமென்பதே இவர்களின் திட்டமாகும்.

**வாடகைக் கட்டுப்பாடு பரீசீலிக்க ஏற்பாடு**

வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் ஏற்கெனவேயுள்ள வாடகைக் கட்டுப்பாட்டை பரிசீலனை செய்வதற்காகக் குழுவொன்றை நியமித்துள்ளார். அத்துடன் ஏற்கெனவே அமைக்கப்பட்டுவரும் திய வீடுகளை நேரில் பார்வையிட்டு அவற்றிற்கான அமைப்புகளைச்செய்யவும் அவர் உத்தேசித்துள்ளார்.

**தபால் இலாகா: பொதுமக்கள் தொடர்பு**

தபால் ஊழியர்களின் திறமையை விருத்திசெய்யவும், அவர்களினுல் இலாகா கூடுதலான பயனைப் பெறவும் வழிகளை மேற்கொள்வதற்கு தபால் தந்தி அமைச்சர் திரு செல்லையா குமாரசூரியர் திட்டமிட்டுள்ளார். பொதுமக்கள் தபால் இலாகாவுடன் தொடர்புகொள்ளக் கூடியவகையில் தபால் இலாகாவின் பணி அமைய வேண்டுமென்பதே இவரது அடிப்படைக்கருத்தாகும்.

**எதிர்காலத் தலைவர்களை ஆக்கவேண்டும்**

'வருங்காலத்தில் இந்த நாட்டில் நல்ல தலைவர்களை உருவாக்கக்கூடிய விதத்தில் கல்விக்கூடங்கள் பணியாற்ற வேண்டும்'

இந்தக்கருத்தை கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் வெளியிட்டுள்ளார், தான் கல்வி நிலையங்களுடன் நெருங்கிய பரிச்சியமுள்ளவரென்றும் கல்விக் கூடங்களை நல்ல முறையில் வளர்ப்பதற்கு மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்ருேர் ஆகிய முத்திறத்தாரும் தத்தமது ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்றும் அவர் விரும்புகின்ருர்.

— —

### ஒலிபரப்பு கூட்டுத்தாபன புதிய தலைவர்

கோட்டை, செவ்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன மாஅதிகாரியாக திரு. சுசில் முனசிங்கா நியமிககப்பட்டுள்ளார். திரு நெவில் ஜெயவீரா தனது பதவியைராஜினமாச்செய்ததைத் தொடர்ந்தே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாக்தாத், ஜுன் 2

முஸ்லிம்களின் சியாப் பிரிவுத் தலைவர் இன்று பாக்தாத்தில் தமது 90வது வயதில் காலமானுர்.

யிருக்கின்றன.

சென்றவருடம் நவம்பர் 16-ந் திகதியன்று 'அப்பல்லோ-12' ஏவப்பட்டபோதும் இந்த வருடம் ஏப்ரல் 11-ந் திகதியன்று 'அப்பல்லோ-13' ஏவப்பட்ட போதும் இது போன்ற விஞ்ஞான விசித்திரம் நிகழ்ந்திருக்கிறது.

காற்ருே பிற வாயுக்களோ இல்லாத வெற்றிடத்தின் வழியாக ஒலியலைகள் பரவ முடியாது என்பது அனுபவபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ள விஞ்ஞான உண்மை. இதற்கு முற்றிலும் மாறுபடுவதுபோல, விண்வெளியில் ருக்கெட் இயங்கும் ஓசை, தரையை எட்டியிருப்பது விஞ்ஞானிகளை வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது.

100 மைல் உயரத்தில் அநேகமாக காற்றே இல்லை. தரைமட்டத்திலிருப்பதை விட 100 கோடி மடங்கு அடர்த்திக் குறைவான காற்றுத்தான் இருக்கிறது. காற்றின் 'திவலை'கள் ஒன்றுக்கொன்று 500 அடி விலகிய நிலையில் இருக்கின்றன

ஒலி அதிர்வு ஏற்படும்போது காற்றிலுள்ள இந்த நுண்ணிய 'திவலை' ள் சலனமடைந்து ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்கின்றன, ஒலி பரவுவது என்பது இவை ஒன்றுக்கொன்று இடித்துக் கொள்வதன் மூலமாக அதிர்வு பரவுவதேயாகும் ஆகையால் காற்று மிக அடர்த்திக் குறைவாக இருக்கையில் ஒலி அதிர்வு பரவ வழியில்லை ஆனுலும் விண்வெளி ஓசை பூமியை எட்டியிருக்கிறது.

### தலை மொட்டை அடித்தனர்

கொழும்புத்துறை செவ்

தாம் ஆதரித்து வந்த கட்சியின் அபேட்சகரே இம்முறை ஆட்சிமன்றம் செல்வார் என நல்லூர்த்தொகுதியில் டாக்டர் ஈ. வி எம் நாகநாதனை ஆதரித்தவருக்கும் அருளம்பலத்தை ஆதரித்தவருக்கும் இடையில் ஏற்பட்ட பந்தயத்தில் அரியாலையைச் சேர்ந்த பல இளைஞர்கள் தமது தலைகளை மொட்டை அடித்துள்ளனர்,

ஒரே வழி என்பதை இலங்கை மக்கள் உணர்ந்து தீர்ப்பளித்துள்ளனர்' என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளுக்குக் கொடுக்கப்பட்ட சாட்டையடி என்றும் அவர் தமது செய்தியில் கூறியுள்ளார்'

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுத் தலைவரும் பாராட்டுச் செய்தியை அனுப்பிவைத்துள்ளார்.

## '10 ஆண்டுகள் சிறிமா தேசிய ஒற்றுமைக்காகப் பாடுபட்டார்'

### — அமைச்சர் குமாரசூரியர்

கொழும்பு, . செவ்

"மக்கள் காட்டிய பேராதரவு திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மீது அவர்கள் மீண்டும் நம்பிக்கை வைத்திருக்கின்ருர்கள். என்பதற்கு சான்ருகும்" என தபால் தொடர்பு மந்திரி திரு. செல்லையா குமாரசூரியர் தபால் தொடர்பு ஊழியர்களால் அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையில் கூறினுர்.

ஊழியர்களை பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் ஸ்ரீமா பண்டாநாயக்காவிற்கு நல்கும்படி வேண்டுகோள் விடுத்த மந்திரி,

"திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்கா கடந்த 10 ஆண்டுகளாக மக்கள் ஜனநாயகத்தையும், தேசிய ஒற்றுமையையும் உருவாக்குவதில் ஈடுபட்டிருந்தார். அவருடைய கனவு இன்று பலித்துவிட்டது திருமதி பண்டாரநாயக்காவினது மாபெரும் வெற்றி இதனை உறுதிப்படுத்துகின்றது" என்ருர்.

"ஒவ்வொருவரும் திறமையாகவும், கடுமையாகவும் உழைக்க வேண்டும்.

தபால் தந்தித்தொடர்பு ஊழியர்கள் தமது திறமையான உழைப்பை நல்க வேண்டும். எம்மிடம் நிதி குறைவு. பணம் உழைக்கும் வழிகளும் நம்மிடம் இல்லை. ஆனல் உழைக்கும் உறுதி எம்மிடமுண்டு" என அமைச்சர் சொன்னுர்.

தபால்மா அதிகாரி திரு. வேர்னன் அபயசேகரா அகில இலங்கை தபால் தந்தித் தொடர்பு தொழிலாளர் சங்கக் காரியதரிசி ஆகியோர் மந்திரியை வரவேற்றுப் பேசினர்.

## இருவீரருடன் 'சோயுஸ் 9' பூமியை வலம் வருகிறது

### வலன்டினவின் கணவர் கப்பலைச் செலுத்துகிருர்

மாஸ்கோ, ஜுன். 2

சோவியத் யூனியன் இரண்டு விண்வெளி வீரர்களுடன் 'சோயுஸ் 9' என்ற விண்வெளிக் கப்பலை வானவெளிக்கு அனுப்பிவைத்துள்ளது. உலகை வலம்வந்த முதலாவது பெண்மணியான வலன்டினவின் கணவர் அன்ரன் நிக்கிலேவ் இக் கப்பலைக் செலுத்திச் சென்றுள்ளார், இவருடன் இன்னுமொருவர் சென்றுள்ளார்.

நேற்றிரவு இலங்கை நேரப்படி சரியாக 12.30 மணிக்கு அனுப்பப்பட்ட 'சோயுஸ் 9 பூமியை வலம் வந்துகொண்டிருக்கும் போது, பூகோள நிலை, வானிலை. உடல்நிலை பற்றிய ஆராய்ச்சிகளை நடத்தும்.

கடந்த அக்டோபரில் சோவியத் யூனியன் ஒன்றின் பின் ஒன்ருக விண்வெளிக்கு அனுப்பிவைத்த 8 கப்பல்களில் 7 பேர் சென்றிருந்தனர் அவை ஒன்ருேடு ஒன்று இணைந்து செயல்படும் பரீட்சையில் ஈடுபட்டன. அதன் பின்னர் தற்போது அனுப்பப்பட்டுள்ள கப்பல் தனித்தியங்கி, வேறு பல ஆராய்ச்சிகளைச் செய்யும் என்று ரஷ்யா அறிவித்தது. அது தனது விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சியை நடாத்த ஆரம்பித்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடுகள் 6-ம், 7-ம், 8-ம் வகுப்புகளுக்கு வழிகாட்டிப்படி எல்லாப் பாடங்களுக்கும். இரண்டாம் பருவத்திற்கு மாதிரிகை வினுக்கள், வினுவிடைகள் வெளிவந்துள்ளன. ஸ்ரீகாந்தா அச்சகம் புத்தகசாலை, 213, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம் 2277

525 X16 ரியூப் இறக்குமதி செய்யப்பட்ட கொப்பர் பெயின்ற் உலகப் புகழ் வாய்ந்தகோல்ற்ஸ் HOLTS) மோட்டார் தன்னியக்க இரசாயனப் பொரு களும் மற்றும் சகல பெயின்ற் வகைகளும் விற்பனைக்கு உண்டு. கையிருப்பு குறைவு. 'ஸ்ரான்லி ஹவுஸ்' 95/1, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 2279

### கல்வி

G. C. E. (prep / O. L.) வகுப்புகளுக்கு விஞ்ஞான பாடங்களில் பிரத்தியேக வகுப்புகள். தொடர்பு கொள்ளவும். 39, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். 2278

சித்தி நிச்சயம், ஜி. சீ. ஈ. (சாதாரணம்) கலை, ஆசிரிய பயிற்சிக் கலாசாலைப் பிரவேசம், சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல் பகல் வகுப்புகளுக்கு பிரவேசங்கள் தற்போது ஏற்கப்படுகின்றன. யூனைட்டெட் அக்கடெமி, நெல்லியடி, கரவெட்டி. 2270

ராஜா (யாழ்ப்பாணம்)
Daily 3 Shows
James Drury,
Steve Carlson
in
THE YOUNG WARRIORS
(war film)


# இசையின் பெருமையை உணர்ந்தவன் தமிழன்

— கவிஞர் கந்தவனம்

மட்டுவில், திங்கள்

இந்த உலகிலே இசையின் மகிமையையும் பெருமையையும் உணர்த்த ஒரு சமுதாயம் இருக்கிறது என்றால் அது தமிழ் சமுதாயம் ஒன்றுதான். தமிழன் அன்றே இசையின் பெருமையையும் மகிமையையும் உணர்ந்துகொண்டதின் காரணமாகவேபண்டைக்காலம் முதல் பல்வேறு கலைகளின் வளர்ச்சிக்கும் தாய்மொழியாவும் கருவியாகவும் அமைந்துள்ள எமது தாய்மொழியை இயல் இசை, நாடகம் எனும் முப்பெரும் பிரிவுகளாகப் பிரித்து முத்துறைகளிலும் கலையைப் போற்றி ஏற்றி வளர்த்து வந்திருக்கிறார்கள்.

இவ்வாறு நுணுவில் ஆதவன் இசைக்கலை மன்றத்தாரின் ஓராண்டு பூர்த்தி விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்திய கவிஞர் திரு கந்தவனம் கூறினார். சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் திரு பி, ஆர் ஜெயரத்தினம் தலைமையில் நடைபெற்றஇந்த ஓராண்டு பூர்த்திவிழாவில் கவிஞர் கந்தவனம் தொடர்ந்து கூறியதாவது

'தமிழ் மொழிக்கேஉரியவனவாகப் பண்டைத்தமிழ் மக்கள் வகுத்துணர்த்தியவை இயல்,இசை நாடகம் என்னும் முத்தமிழ்த் துறைகளாகும். நமது கண்ணிற்கும் கருத்திற்கும் புலனாகும் பொருட்களின் இயல்பினை உள்ளவாறு விளக்குவதற்கேற்ற சொல் அமைப்பினையுடையது. இயற்தமிழ் சொல்லக் கருதியற்றவை, கேட்போர் ஆர்வமுடன் ஏற்றுக் கொள்ளும்படி இன்னோசையுடன் புலப்படுத்தும் மொழிநடை இசைத் தமிழாகும். இந்த இசையின் பெருமையை பண்டைக்காலந்தொட்ட தமிழன் உணர்ந்து கொண்டான். ஆனால் அமெரிக்காவோ இன்று இசைபற்றி ஆராய்ச்சி நடத்தியுள்ளது.

இன் இசையானது நெற்பயிர் விளை நிலங்களில் பரப்பப்படுமாயின், அந்த இசை பரந்த இடங்களில் நெல் விளைச்சல் எத்தனையோ மடங்கு அதிகப்படியாக இருக்கும் என்று கூறுகிறார்கள்.

அன்றைய ஆங்கில நாட்டு நாடகப் புகழ் மேதையான சேக்ஸ்பியர் கூட இசையைப் பற்றிக் கூறும் பொழுது ஒருவன் இசையில் அதிக திறமையும் பாண்டித்தியமும் பெற்று விளங்க வேண்டும். அது தவறின், இசையை இரசிக்கும்திறமையாதல் பெற்றிருக்க வேண்டும்.இந்த இரண்டும் அற்றவன் உண்மையில் போற்றத் தக்க ஒரு ஜென்மம் அல்ல என்று கூறுகிறார்.

எமது மொழியில் பண்டைக்காலம் தொட்டே ஆயகலைகள் அறுபத்து நான்கு என்று கூறியுள்ளனர். இப்படியான ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் எமது இனம் போற்றி வளர்ப்பதைத் தொடர்ந்தே, எமது இனமும், மொழியும் உயர்வு பெற்று வளர முடியும்.இதற்கு நமது மத்தியில் கலைஞர்களைப் போற்றி வளர்க்கும் பண்பும், ஊக்குவிக்கும் பண்பும் அவசியம் வளர வேண்டும். மேலும் அன்றைய மன்னர்கள் எமது மொழியையும், கலையையும் போற்றி வளர்த்து வந்தனர். ன்றும் அந்த நிலை வளர வேண்டும் இதற்கு அரசாங்கமே இத்துறையில் அக்கறை செலுத்த வேண்டும்.

ஆங்கிலத்தில் 'ஜென்டில்மென்'என்று கூறும் பதத்தைப் போன்று,எமது காவலனுச்கும் இலக்கிய கர்த்தாக்கள் கூறும், குறிப்பாக கம்பன் கூறும், நம்பி-அண்ணல் என்னும் பதங்கள் பொருந்தக்கூடியதாக இருக்க வேண்டும். எனவே இன்று எமக்கென தெரிவு செய்த காவலனிடம் அத்தனை பண்புகளும் நிறைந்திருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. மேலும் எமது மத்தியிலே, அன்பும்,அறனும், ஒற்றுமையும், வளரவும், கலை வளரவும்,தலைவர்கள் எமது எதிர்கால இளைஞர்களுக்கு வழி காட்ட வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

# அமைதியை காப்பதுதான் இப்போதைய தேவை

## முன்னாள் நீதியரசர் பஸநாயக்கா அறிக்கை

கொழும்பு,செவ்

தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து ஏற்படும் வாதப் பிரதிவாதங்களில் கவனத்தைச் செலுத்தாமல் நாட்டின் முன்னேற்றப்பணிகளை செய்துமுடிக்கயாவரும் தயாராக வேண்டுமென்றும் அமைதி கெடுமானால் மக்கள் பெரும் கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க நேரும் என்றும் முன்னாள் பிரதம நீதியரசர் திரு பஸநாயக்கா கூறியிருக்கிறார்

இன்றுள்ள நிலைமையில் புதிய அரசுக்கு மக்கள் கொடுக்கும் உதவி நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதாகும். அமைதி மிகவும் விலைமதிக்க முடியாத ஒன்று அதுகுலையும் போதுதான் அதன் அருமை எவருக்கும் விளங்கும் எனவே பொதுத் தேர்தலைத் தொடர்ந்து ஏற்படும் வாதப்பிரதிவாதங்களை மறந்து நமது தாய் நாட்டின் சுபீட்சத்துக்கான நடவடிக்கைகளில் இறங்குவதற்கு யாவரும் தயாராக வேண்டும் என்று திரு பஸநாயக்க விடுத்துள்ள ஒரு செய்தியில் குறிப்பிட்டிருக்றார்

அமைதியைக் கெடுப்பது புதிய அரசுக்கு செய்யும் இடைஞ்சலாகும் அது மட்டுமல்ல அமைதி கெடுமானால் ஒன்றுமறியாத அப்பாவிமக்கள்தான் கஷ்டங்களுக்குள்ளாகநேரும் எனவே அமைதியைக்காத்து நாட்டின் உயர்வுக்கு உதவும்படி அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்: என்று அவர் தெரிவித்துள்ளார்.

0 0 0

# ஒரு குடும்பத்தில் மூவர் கொலை; 4 பெண்களைக் காணவில்லை

## அரசியல் குரோதம் காரணமாம்

கோட்டை, செவ்

உனன்தென்ன கிராமத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். அவர்கள் வீடு தீக்கிரையாக்கப்பட்டது. கொலையுண்ட பெற்றோரின் 4 அழகிய இளம் புதல்விகள் மறைந்துவிட்டனர். இவற்றிற்கு காரணம் அரசியல் குரோதம் தான் என பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

அரசியல் கட்சியொன்றின் ஊர்வலம் சென்றுகொண்டிருந்தபோது இச்சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது.

கலவரம் ஏற்பட்டபோது ஒரு கோஷ்டியினர் வீட்டுக்குத் தீ வைத்ததாகவும் வீட்டுக்குள் இருந்த சைமன் அப்புகாமி என்பவரும், அவர் மனைவியும், அபயகோன் என்பவரும் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

சைமன் அப்புகாமியின் 4 அழகிய புதல்விகளுக்கு என்ன நடந்ததென்பது தெரியவில்லை என பொலிசார் தெ[illegible]வித்தனர். இந்த முக்கொலை சம்பந்தமாக அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் சம்பந்தமாக பொலிசா[illegible] 11 பேர்களை தேடிவரு[illegible]ன்றார்கள். மாய

### கடற்றொழில் கூட்டுஸ்தாபனம்

# பூரண ஆதரவு அளிக்கும்

கோட்டை. செவ்.

இலங்கை கடற்றொழில் கூட்டுஸ்தாபன ஊழியர்கள் சங்கம் பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவுக்கு அவரது அமோக வெற்றியைக் குறித்து வாழ்த்துச் செய்தி யொன்றையனுப்பியுள்ளது. அவ்வாழ்த்துச் செய்தித் தந்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது

'கூட்டுஸ்தாபனத்தின் 3000 தொழிலாளர்கள் உட்பட எங்கள் அங்கத்தினர் இக்கூட்டுஸ்தாபனத்தின் நிர்வாகச் சீர்கேட்டை கடந்த 3 ஆண்டுகளாக எதிர்த்து வருவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள் நீங்கள் இது சம்பந்தமாக உடனடி நடவடிக்கைகள் எடுப்பீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

முன்னைய கடற்றொழில் அமைச்சர் எங்களைப்பார்க்க மறுத்தது மட்டுமன்றி நாங்கள் பலதடவைகள் கோரியும் நிர்வாகத்தைத் திருத்தியமைக்கவும் ஒருவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடந்த ஐந்துமாத காலமாக எங்களுககும் எங்கள் தொழிலாளர்களுக்கும் அவர் இழைத்த இன்னலுக்கு மக்[illegible] அவரைத் தோற்கடி[illegible] நல்ல பாடம் படிப்பித்துள்ளார்கள்.

எங்கள் சங்கம் உங்கள் அரசாங்கத்துக்கு தனது முழு ஆதரவையும் அளிக்கவிருக்கிறது.

# இன்றைய பலன்

வைகாசி மாதம் 20-ம் திகதி [3-6-70]

**மேஷம்-** கண்துடைப்பு வேலைகளால் நலிவுக்கு இடமேற்படும். உடல்நலமும் சிறிது பாதிக்கப்படலாம். குடும்பத்தில் சிறுபூசல் தோன்றிமறையும். உணவு விடயத்தில் கவனம் வேண்டும்.

**ரிஷிபம்-** குடும்பக் கவலையுடன் குறுக்குவழித்தலையீடும் தென்படும். உங்களைப் பற்றி புனைந்துரைகளைப் பரப்புவதற்கு சிலர் முற்படுவார்கள், அதிகபேச்சு ஆபத்துக்கு இடமளிக்கும். முடிந்தவரை மௌனம் சாதிக்கவும்.

**மிதுனம்-** திடீர்வரவுகளுக்கு இடமுண்டு, வாழ்க்கையிலும் நல்ல திருப்பம் ஏற்படும். பேச்சுவன்மையின் மூலம் பெரியஇடத்து ஆதரவைத் தேடிக்கொள்வீர்கள். குடும்பத்திலும் சுவையான நிகழ்ச்சிகள் உண்டு.

**கடகம்-** ஆணவப்போக்கு அடிசறுக்கவைக்கும்; பின்னணியில் மோசடிவேலைகள் நடைபெறலாம், மேலதிகாரியின் கழுகுப்பார்வை உங்களை வட்டமிடலாம் முன்யோசனையுடன் செயலாற்றுக.

**சிம்மம்-** உள்ளப்படுதாவில் உவகை கூத்தாடும், உறவினர்கள் உதவுவதற்கு முன்வருவார்கள். பத்திரிகைத்துறையில் தொழில் புரிவோர் பாராட்டுதல்களைப் பெறுவார்கள்.

**கன்னி-** பண நெருக்கடி விலகுவதற்கான அறிகுறிகள் தென்படும். புத்திர வழியால் உதவியும் கிடைக்கும். செவிக்கு இனிமை தரும் செய்தியும் வந்து சேரும், பயணமும் மேற்கொள்ளப்படலாம்.

**துலாம்-** தொடங்கிய விடயம் பாதியில் தடைபடும். இதனால் பொருள் விரயத்துக்கும் இடமேற்படும். குடும்பத்தில் உடல் நலக் குறைவு தோன்றும். உணவுசம்பந்தமாகச் சுகாதாரம் வேண்டும்.

**விருச்சிகம்-** ஒளிமயமான தினம். கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு. ஆசிரியர்கள் பாராட்டப்படுவார்கள். இன்று ஏற்படும் புதிய திருப்புமுனை நிம்மதியை அளிக்கும் வாகனநலனும் உண்டு.

**தனுசு-** கடன்தொல்லைகள் கவலையைத் தரும். உறவினர்களுடன் பிணக்குகள் தோன்றும். நண்பர் ஒருவரின் நடவடிக்கை கவலையைத் தரலாம். புதிய முதலீடுகளை இன்று தவிர்ப்பதுடன் உஷாராகவிருக்கவும்.

**மகரம்-** பூமியால் இலாபமுண்டு. புத்திரர் புகழும் சேரும். பொதுசனத் தலைமைக்கான வாய்ப்பும் கிடைக்கும், உடல்நலம் பாதிக்கப்படக்கூடுமாகையால் வாய்வுப்பதார்த்தங்களை நீக்கிக்கொள்ளவும்

**கும்பம்-** அந்தஸ்தில்உயர்வு தென்படும், எதிர்பார்த்த பதவிஉயர்வுக்கு இன்று முன்னோடி நடவடிக்கை எடுக்கப்படும், வழக்குவிவகாரங்களில்வெற்றிகாணும்.

**மீனம்-** கூட்டுவியாபாரத்தில் முன்னேற்றமுண்டு. வெளியூரிலிருந்து திருப்திகரமான செய்தி கிடைக்கும். கடமையில் ஆர்வம் பிறக்கும். டாக்டர்களுக்குச் செல்வாக்குப் பெருகும். நிம்மதியான தினம்.

சோதிடக்கலாநிதி

திருமலை
க. வேலுப்பிள்ளை

# உயர் பதவிகளை ராஜினுமாச் செய்தவர்கள் விபரம்

கோட்டை. செவ்வாய்

புதிய அரசாங்கம் பதவி ஏற்றுக்கொண்ட பின்னர் உயர் பதவி வகித்த பலர் தங்கள் பதவிகளை ராஜினுமாச்செய்துள்ளனர். விபரம் வருமாறு:

மக்கள் வங்கித் தலைவர் திரு. ரி பி. பானபொக்கே தனது ராஜினுமாக் கடிதத்தை நேற்றுச் சமர்ப்பித்தார். பொதுசேவைக் கமிஷனிலிருந்து திரு எல்.ஜே டி.எஸ்.செனிவிரத்ன ராஜினுமாச்செய்துள்ளார்.

திரு. லூசியன் சில்வா, சாப்புறுதிக கூட்டுத்தாபன இயக்குனர் சபையிலிருந்து ராஜினுமாச் செய்துள்ளார்.

பிரித்தானியாவில் உள்ள இலங்கைத் தூதுவர் டாக்டர் எம்.வி.பி பீரிஸ் ராஜினுமா செய்வாரென எதிர் பார்க்கப்படுகிறது

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஜி வி. பி. சமரசிங்கா தமது இளைப்பாற்றல் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

மகாவலி அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு. எம் எஸ் பெரேரா தனது ராஜினுமாச் கடிதத்தை நீர்ப்பாசன மின்சக்தி மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்காவிடம் கையளித்தார்

இலங்கை நிதி அபிவிருத்திக் காப்பரேஷன் தலைவர் திரு. வல்வின் ஏ டி சில்வா ராஜினுமா செய்துள்ளார்.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத் தலைவர் திரு. சந்திர விஜயசேகரா தனது ராஜினுமாக் கடித தை அனுப்பியுள்ளார்.

சி டபிள்யு ஈ. துணைத் தலைவர் திரு டி. வீரதுங்காவும் தனது ராஜினுமாக் கடிதத்தைக் கொடுத்துள்ளார்.

தேசிய மாவரைக்கும் ஆலைக் கூட்டுத்தாபன இயக்குனர் திரு. எம். டி. கே. ஜயவர்த்தன தமது பதவியிலிருந்து ராஜினுமாச்செய்துள்ளார். ராஜாங்க அமைச்சரின் நிரந்தரக் காரியதரிசி திரு ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ், கப்பல்போக்குவரத்து சுற்றுலாப் பிரயாண மந்திரி திரு. பி பி ஜி. கலுகல்லையிடம் தனது ராஜினுமாவை சமர்ப்பித்துள்ளார்.

இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபன இயக்குனர் சபையிலுள்ள ரியர் அட்மிரல் ராஜன் கதிர்காமர், ஜனுப் எம். எஸ் அபூபக்கர், திரு ஸ்ரான்லி பெர்ணுண்டோ திரு. ஓ. பெர்ணுன்டோ, ஜி வி. எஸ். டி. சில்வா, திரு, டி. கே. சுப்பிரமணியம் ஆகியோரும் ராஜினுமாச் செய்துள்ளனர்.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத் தலைவர் திரு. நெவில் ஜெயவீராவும் ராஜினுமாச்செய்தவர்களில் ஒருவர்.

# கஷ்டம் நீங்கியது

வேலணை, செவ்

வேலணை அரசங்க ஆஸ்பத்திரிக்கு நிரந்தர டாக்டர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். டிஸ்பென்சரியிலும், மருத்துவமனையிலும் நிரந்தர டாக்டர் இல்லாததால் இப்பகுதிமக்கள் அனுபவித்து வந்த கஷ்டம் இதனுல் நீங்கிவிடுமெனக் கூறப்படுகிறது.

வேலணை மத்திய நூல்நிலையத்திலுள்ள புஸ்தகங்களை வாசகர்கள் வெளியே எடுத்துச்சென்று படிக்கவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர் — கே.ஆர்.விஜயா
நாகேஷ் — வி கே. ராமசாமி
நடித்த
பெண்ணை வாழ விடுங்கள்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30 10-00
ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா
நாகேஷ் - எம். ஆர். ஆர். வாசு
நடித்த
பெண்ணை வாழ விடுங்கள்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா
நாகேஷ் - எம். ஆர். ஆர். வாசு
நடித்த

## பெண்ணை வாழ விடுங்கள்

இப்பொழுது திரையிடப்படுகிறது
வின்ஸர்
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

★ ஜெய்சங்கர்
★ ஜெயலலிதா
★ நாகேஷ் ★ சுந்தரராஜன்
நடித்த

## முத்துச் சிப்பி

இப்பொழுது திரையிடப்படுகிறது
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)

எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
நாகேஷ் ரெங்கராவ்
மற்றும் பலர் நடித்த




மேலும் எமது மத்தியிலே, அன்பும், அறனும், ஒற்றுமையும், வளரவும், கலை வளரவும், தலைவர்கள் எமது எதிர்கால இளைஞர்களுக்கு வழி காட்ட வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

கவிஞர் ஐயாதுரை, ஆசிரியர் செல்லையா, உட்பட பலர் உரை நிகழ்த்தினர். இசை மன்றங்கள் பலதினதும் இன்னிசை கீதங்கள் இன்பவிருந்தளித்தன.

— —

### கல்வி அபிவிருத்திசபை பிரமுகர் வாழ்த்து

யாழ்ப்பாணம், புதன்

'கடந்த 35 ஆண்டுகளாக அரசியலிலும், சமூக சேவைகளிலும் தமது வாழ்வை அர்ப்பணித்தவர் திரு எம் ஸி சுப்பிரமணியம். அவர் சாத்வீக முறையில் 5 லட்சம் சிறுபான்மைத் தமிழர்களின் உரிமைக்காக தொடர்ந்து போராடுவார் என நம்புகிறேன்'' என சிறுபான்மைத் தமிழர் கல்வி அபிவிருத்திச்சபை பிரமுகர் திரு க நடராசா திரு எம். சி சுப்பிரமணியம் நியமன எம் பியாக தெரிவு செய்யப்பட்டதையிட்டு அவருக்கு அனுப்பிவைத்த வாழ்த்துச் செய்தியில் கூறி உள்ளார்.

மேலும் இவர் தனது வாழ்த்தில் கூறியுள்ளதாவது:-

சாதிபேதமற்ற சமுதாயத்தை நிர்ணயிக்கப் போராடும் ஏனைய தமிழ்த் தலைவர்களுடன் ஒத்துழைப்பார் என நம்புகின்றேன் என்று கூறி உள்ளார்.

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
கல்யாணகுமார் - விஜயலக்ஷ்மி
நடித்த
தாயில்லாப் பிள்ளை

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
எம். ஜி. ஆர். —மாலினி
நடித்த
சபாஷ் மாப்பிள்ளை

REGAL JAFFNA
Daily 3 Shows
Hank Williams Jr.
in
TIME TO SING

...சார் ...த்தனர். இந்த முக்கொலை சம்பந்தமாக அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் சம்பந்தமாக பொலிசார் 11 பேர்களை தேடிவருகின்றார்கள். மாயமாக மறைந்த 4 இளம் பெண்களையும் பொலிசார் தேடிவருகின்றனர்.

— —

### 3-வது ஆண்டு விழா

தாவடி, செவ்

நவாலி பாரதி சனசமூக நிலைய விளையாட்டுக்கழக 3-வது ஆண்டு நிறைவு விழா இம்மாதம் 4-ம் திகதி நவாலி மத்தியவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

கலையரசு திரு. க. சொர்ணலிங்கமும் பாரியாரும் பிரதம அதிதிகளாக்கலந்து கொள்ளும் இவ்விழாவில் காலை நிகழ்ச்சிகளை ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலைய அதிபர் ஆரம்பித்து வைப்பார். இரவு சொற்பொழிவும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

— —

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**புதன் 3—6—70**

(செய்திகள்: காலை 6 45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, -30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப் பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள், 8-30 செய்திச் சுருக்கம்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

12-00 செய்திச்சுருக்கம் 12-03 சித்திரகானம், 1-00 கதம்பஇசை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 செய்திச் சுருக்கம். 4-28 கல்விஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள். 5-30 ஓடிவிளையாடுபாப்பா.

இரவு 6-10 மெல்லிசை, 6-15 இசைப்பயிற்சி, 6-30 கிராம சஞ்சிகை, 7 00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 வயலின், 7-45 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்திச் சுருக்கம்.

...தனியமைக்கவும் ஒருவித நட... வடிக்கையும் எடுக்கவில்லை. கடந்த ஐந்துமாத காலமாக எங்களுககும் எங்கள் தொழிலாளர்களுக்கும் அவர் இழைத்த இன்னலுக்கு மக்...

...நல்ல பாடம் படிப்பித்துள்ளார்கள்.

எங்கள் சங்கம் உங்கள் அரசாங்கத்துக்கு தனது முழு ஆதரவையும் அளிக்கவிருக்கிறது.

...பெருகும். ... தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

வேலையை மத்திய நூல்நிலையத்திலுள்ள புஸ்தகங்களை வாசகர் வெளியே எடுத்துச்சென்று படிக்கவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.



# இதோ!

## உங்கள் பயிர்களின் ஆரோக்கியத்தைப் பேணும் பவர்ஸ் விவசாய ரசாயனப் பொருட்கள்!



**எகுகிடொக்ஸ 50**
உடனுக்குடன் செயலாற்றும் வன்மையும் நெடுங்காலம் பாதுகாப்பளிக்கும் தன்மையும் கொண்ட சக்தி மிக்க இக் கிருமி நாசினி நெற்பயிர், புகையிலை, மிளகாய், உருளைக் கிழங்கு மற்றும் காய்கறிச் செடிகளைத் தாக்கும் சகல கிருமிப் பீடைகளையும் அழிக்க வல்லது.

**டீனேல் 25**
நெற்பயிர், மரக்கறி, பழ மரங்கள் முதலியவற்றின் இலைகளை உண்ணும் மயிர் கொட்டிகளை அழிக்கக் கூடிய கிருமி நாசினி.

**தியோவிற**
சிற்றுண்ணி, ஏப்பிட்டுகள் (அழுக்கணவன்), திறிப்ஸ் (பனிப்பூச்சி) போன்ற சிறு பூச்சி இனங்களை ஒழிக்க வல்ல இந்தக் காளான் நாசினியை டீனேல் 25 உடன் கலந்து உபயோகிக்கவும். மிளகாய்ச் செடியில் உண்டாகும் குருமன் நோயை அறவே அழிக்கவல்லது என யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரியினல் சிபார்சு செய்யப்பட்டது.

**டைமெகுரோன் 100**
தாவரத்தில் ஊடுருவக்கூடிய இக் கிருமிநாசினியை செடியின் எப்பாகத்திலும் தெளிக்கலாம். அரிக்கும், உறிஞ்சும், உண்ணும் பூச்சிகள், தண்டு கோதிகள் போன்றனவற்றை அழிக்க அதி சக்தி வாய்ந்தது.

**மீல்டொக்ஸ் 50**
மரக்கறி, உருளைக் கிழங்கு, பழவகை முதலிய செடிகளில் உண்டாகும் எரிவந்தம், புள்ளி விழுதல், பூஞ்சண நோய் ஆகியவற்றிற்கு உபயோகிக்க மிகச் சிறந்தது.

**பென்பார் 50**
நெற்பயிர், காய்கறிச் செடிகள், பழ மரங்கள் முதலியவற்றை அழிக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தக் கூடிய சக்தி வாய்ந்த கிருமி நாசினி.

பயிர்ஆரோக்கியத்துக்குப் பக்கத்துணை பவர்ஸ் விவசாய ரசாயனப் பொருட்களே.

விபரங்களுககு எழுதுக:

**ஏ. பவர் அன் கொம்பனி லிமிட்டெட்**
விவசாய சேவை,
த. பெ. 11, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரு நாட்டு நில அதிர்ச்சி:

# 15,000 பேர் பலி; 1000 சடலங்கள் மீட்பு; லட்சம் பேர் வீடிழந்தனர்

## சர்வதேச உதவியை நாடுகிறார் அதிபர்

லீமா, ஜூன் 2

பேரு நாட்டில் ஏற்பட்ட பெரும் நில அதிர்ச்சியில் 15,000 க்கும் அதிகமான மக்கள் பலியாகியிருக்கலாமென அஞ்சப்படுகிறது. இதுவரை 1000 சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் மேலும் சில கிராமங்கள் அழிந்துவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

நில அதிர்ச்சியில் ஒரு லட்சம் பேர் வீடிழந்துள்ளனர். நேற்று மீண்டும் ஏற்பட்ட அதிர்ச்சியில் 3 கிராமங்கள் அழிந்துவிட்டன. சடலங்களை மீட்கும் நடவடிக்கையில் இராணுவம், கடற்படை தொண்டர்படை தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. சர்வதேச ஸ்தாபனங்களின் உதவியையும் பேருநாட்டு அதிபர் கோரியுள்ளார்.

நில அதிர்ச்சியின் காரணமாக தகவல் தொடர்பு முற்றாக துண்டிக்கப்பட்டுவிட்டதால் இவ்வதிர்ச்சியினால் ஏற்பட்ட சேதங்களை அறிந்துகொள்ளமுடியவில்லை. 15,000 க்கும் அதிகமானோர் பலியாகியிருக்கலாம் என ஒரு செய்தி கூறியது.

டான்யூப் ஆறு பெருக்கெடுத்து ஓடத்தொடங்கியுள்ளது. இதனால் பல கிராமங்கள் நீரில் மூழ்கிவிட்டன. யூகோஸ்லேவியாவும் சேதத்துக்குள்ளாகும் நிலைமையில் இருப்பதாகக் கூறப்பட்டது.

## மே. ஜெர்மன் அதிபரின் இயக்கம்

பொன், ஜூன் 2

மேற்கு ஜெர்மன் அதிபர் வில்லிபிராண்ட் கிழக்கு ஜெர்மனியுடன் வைக்கவிருக்கும் தொடர்பு சம்பந்தமாக பொதுமக்களின் விருப்பத்தை அறிந்து கொள்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

இதற்கான இயக்கம் ஒன்றை அவர் ஆரம்பித்துள்ளார். இதன் மூலம் நாட்டு மக்களின் விருப்பத்தை அறிந்துகொள்ள முடியும் என அவர் நம்புகிறார்.

— —

## வியாழனுக்குச் செல்லும் அமெரிக்க விண்வெளிக்கலம்

வாஷிங்டன், ஜூன். 2

1972-73ம் ஆண்டளவில் வியாழனுக்கு விண்வெளிக் கலத்தை அனுப்புவதற்கான நடவடிக்கைகளில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. வியாழனுக்கு அனுப்பயிருக்கும் புதிய விண்வெளிக் கலங்களுக்கு 'பயோனியர்-எஃப்', 'பயோனியர்-ஜி' என்று பெயர் வைக்கப்படும்.

வியாழனை அணுகி, அதை அண்மைக் காட்சியாகப் படம்பிடித்து, அனுப்ப வேண்டும் என்பது இவற்றின் திட்டம். வியாழனை அணுகி அண்மையிலிருந்து படம் பிடிப்பது அதுவே முதல் தடவையாகவிருக்கும்.

சூரிய மண்டலத்திலுள்ள கிரகங்களில் மிகப் பெரியது வியாழன்தான். செவ்வாய்க்கும் அப்பால் வெகுதொலைவில் இருக்கிறது வியாழன். செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடைப்பட்ட விண்வெளிப்பற்றி நேரடியாக விஞ்ஞானத்தகவல்கள் பெறுவதும் புதிய திட்டத்தின் நோக்கமாகும். செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடைபட்ட வெளியில தான்நுண்கோள்கள் நிறைந்த வளையம் இருக்கிறது. அந்த நுண்கோள்களை ஆராய்வதும் ஒருமுக்கியநோக்கமாகும்.

பாரத

## அணுசக்தி ஆராய்ச்சிக்கு ரஷ்யா இணக்கம்

மாஸ்கோ, ஜூன் 2

அணுசக்தி ஆராய்ச்சியை அபிவிருத்தி செய்வதற்குச் சோவியத் யூனியன் பாரதத்திற்கு உதவிசெய்ய முன்வந்துள்ளது. இரு நாடுகளின் அணுசக்தி ஆராய்ச்சி விஞ்ஞானிகளின் பிரதிநிதிகள் மாஸ்கோவில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோது சோவியத் யூனியன் இத்திட்டத்திற்கு ஆதரவு தருவதாக உறுதி கூறியுள்ளது.

சோவியத் அணுசக்தித் தலைவருடன் பாரதப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். தொழில் நுட்பம், வர்த்தகம், விஞ்ஞானம் சம்பந்தமாக நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இரு தரப்பினரும் பூர்த்தி அடைந்ததாகவும் பத்திரிகைகளுக்கு விடுக்கப்பட்ட அறிக்கையொன்றில் கூறப்பட்டுள்ளது.

பாரதத்தில் தயாரிக்கப்படும் புதிய பண்டங்களைச் சோவியத்யூனியனுக்கு இறக்குமதி செய்வதுபற்றிப் பேசுவதற்காகச் சோவியத் குழு ஒன்று பாரதம் செல்லவிருக்கிறது. 30இலட்சம் காலணிகளையும் பாரதத்திடமிருந்து சோவியத் யூனியன் இறக்குமதிசெய்யும்.

## டட்லியின் படங்கள் அகற்றப்பட்டன

கண்டி, செவ்

ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் பலர் தங்களுக்குக்கிடைத்த அமோகவெற்றியையிட்டு அரசாங்க நிறுவனங்களுக்குச் சென்று அங்கு மாட்டப்பட்டிருந்த முன்னைய பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவின் படங்களை அகற்றிவிட்டுப் புதிய பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவினதும் அவரது கணவர் திரு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவினதும் படங்களைத் தொங்கவிட்டார்கள்.

இங்கு சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ள பஸ்கள்யாவற்றிலும் திரு. டட்லி சேனநாயக்காவின் படங்கள் நீக்கப்பட்டுப் பிரதமரின் படங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

— —

## வெலிமடைத் தேர்தல் ஆட்சேப மனு

## ஜூன் 22ல் விசாரணை

கோட்டை, செவ்வாய்

வெலிமடைத் தேர்தல் ஆட்சேப மனு மீதான விசாரணை இம்மாதம் 22ந் திகதி நுவரெலியாவில் தேர்தல் நீதிபதி திரு. ஏ. சி. ஏ. அலெஸ் தலைமையில் விசாரணைக்குக் எடுக்கப்படும்.

நேற்று எடுக்கப்பட்ட முடிவைத் தொடர்ந்து வெலிமடையைச் சேர்ந்த திரு.பேர்ஸி சமரவீரா இந்த ஆட்சேப மனுவைத் தாக்கல் செய்தார். தமது தேர்தல் நியமனப் பத்திரத்தை தாக்கல் செய்யும்பொழுது கையொப்பம் இடவில்லை என்ற குற்றச்சாட்டின் பேரில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அபேட்சகர் திரு. ஆர். என். பண்டாராவின் ஏஜன்ட் ஆட்சேபித்ததனால் அதனை ஏற்ற தேர்தல் அதிகாரி, திரு. பண்டாரா போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டதாக அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. இதனை ஆட்சேபித்தே திரு.பேர்ஸி சமரவீரா ஆட்சேப மனுவைத் தாக்கல் செய்தார்.

— —

# தாய்லாந்து கம்போடியாவுக்கு தொண்டர் படை அனுப்பமுடிவு

பாங்கொக், ஜூன் 2

கம்போடியாவுக்கு தொண்டர்படைகளை அனுப்பவிருப்பதாக தாய்லாந்து அரசாங்கம் அறிவித்துள்ளது. கம்போடியா நாட்டுக்குடிமக்களின் நலன் கருதி இம்முடிவுக்குத்தாம் வந்துள்ளதாக தாய்லாந்து அதிபர் விடுத்துள்ள செய்தியொன்றில் கூறியுள்ளார்.

அண்மையில் நாம்பனுக்குச் சென்று திரும்பிய தாய்லாந்து அதிபர் நாடுதிரும்பியதும் இம்முடிவை எடுத்தார்.

கம்போடியாவிலிருந்து சகல வெளிநாட்டுத்துருப்புக்களும் வெளியேறவேண்டும் என்று கோரியநாடுகளில் தாய்லாந்தும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது. தாய்லாந்து கம்போடியாவுக்கு தொண்டர்படைகளை அனுப்புவதென்ற திட்டத்தை அமெரிக்கா ஆதரித்துள்ளது. இம்மாத இறுதியில் அமெரிக்க துருப்புக்கள் கம்போடியாவிலிருந்து வெளியேறுவதென்றமுடிவு, இதனால் மாற்றப்படலாம் எனக்கூறப்படுகிறது.

### அரசுநடவடிக்கை பாதிப்பு

கம்போடியாவில் நேற்று முழுவதும் அரசுநடவடிக்கை பாதிக்கப்பட்டிருந்தது. தென்வியட்னாம் துருப்புக்கள் 30 இடங்களில் பெரும் தாக்குதலில் ஈடுபட்டிருந்தன லாவோஸுக்கு அருகே தாய்லாந்துக்கு 3 கில்லோமீட்டர் தொலைவிலுள்ள கிராமமொன்றை கம்போடியத் துருப்புக்கள் கைப்பற்றிவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

## குருஷ்சேவ் ஆஸ்பத்திரியில்

மாஸ்கோ, ஜூன் 2

சோவியத்யூனியன் முன்னாள் பிரதமர் குருஷ்சேவ் சுகவீனம்காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் பதவியிலிருந்து 1964-ம் ஆண்டு அக்டோபர் மாதம் பதவி நீக்கம் செய்யப்பட்ட திரு. குருசேவ் இதுவரை அரசியலிருந்து ஒதுங்கியிருந்தார். கடந்த வெள்ளிக்கிழமை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவரின் தேகநிலை பாரதூரமாகஇல்ரி என அறிவிக்கப்பட்டது.

— —

### இந்தியா திரும்பிய 4 குடும்பங்கள்

## உதவி வழங்க உத்தரவு

சென்னை, ஜூன் 2

இந்தியக் குடியுரிமை பெற்று இலங்கையிலிருந்து

## வடவியட்னும் கயனு பிரதமருக்கு வாழ்த்து

கோட்டை, செவ்

வடவியட்னும் தனது பூரண ஆதரவை இலங்கைக்கு கொடுப்பதுடன் இலங்கை மக்களின் அமெரிக்க எதிர்ப்பு நடவடிக்கைக்கு தொடர்ந்து ஆதரவு கொப்பதாக வடவியட்னும் பிரதமர் திரு. வான்டொங் இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் வடவியட்னும் - இலங்கையின் நல்லுறவு மேலும் பலமடைய வேண்டும் என்றும் கூறியுள்ளார்

கயனுவின் மார்ஸிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. [illegible]ஜெகன் இலங்கைப் பிரதமருக்கு அனுப்பி உள்ள வாழ்துச் செய்தியில் சோஷலிஸத்திற்கு புதிய பாதையை திறந்துள்ள[illegible] வெற்றிக்கு [illegible] முன்[illegible]ற்றக் கட்சியின்

# செய்திச் சுருக்கம்

### அருந்ததியர் சங்கம்வாழ்த்து

படிப்படியாக நாட்டில் சமாதானமும் சுபிட்சமும் அடையப்பிரார்த்திப்பதாகவும், நாட்டிலுள்ள இரண்டரைலட்சம் ஹரிஜனர்களின் சார்பில் வாழ்த்துத் தெரிவித்துக் கொள்வதாகவும் தெரிவிக்கும் செய்தியொன்றை அகில இலங்கை அருந்ததியார் சங்கத் தலைவர் திரு. எம். வேலாயுதம் பிரதமர் சிறிமாவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

உள்ளூராட்சிமன்றங்களிலும் மற்றும் அரசாங்க இலாகாக்களிலும் அருந்ததியார் சங்க உறுப்பினர்[illegible]லரும் கடமையாற்றிவருவதாகவும், மற்ற ஊழியர்[illegible] இவர்களும் [illegible] வேறுபாடின்றி வாழவும், நாட்டில் வகுப்பு வாதப்பூசல் ஒழிந்து [illegible]

### வாழ்க்கைச் செலவு உயர்வு

கடந்த ஏப்ரல் மாதத்தைவிட மே மாதத்தில் வாழ்க்கைச்செலவு உயர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேமாதத்தில் வாழ்க்கைச் செலவு 138 6 அதிகரித்துள்ளது. ஏப்ரலைவிட இது .3 விகிதத்தால் அதிகரித்துள்ளது.

### கல்விமந்திரிக்கு வாழ்த்து

அகில இலங்கை அரசாங்க ஆங்கில ஆசிரியர் சங்கம் கல்விமந்திரிக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் அரசாங்கத்திற்குத் தமது பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்குவதுடன் சிறந்த கல்வித்திட்டத்தை அமைச்சர் அமுல் நடத்துவார் என நம்புவதாகவும் தெரிவிக்கப்

— —

திரும்பி உள்ளார். இவர் திரு. ரி. பி. இலங்கரத்தின நிதிமந்திரியாக இருந்தபோது திறைசேரியில் உதவி காரியதரிசியாக இருந்தவர்.

### அழுகிய நிலையில் பிணம்

மீன்பிடிக்கச் சென்றிருந்த கடல் தொழிலாளர் ஒருவர் 14 தினங்களின்பின்னர் பிணமாகக் கண்டுபிடிக்கப்பட்டார். இப்பரிதாப சம்பவம் கிளிநொச்சிப் பொலிஸ் பகுதியில் நடைபெற்றது.

தருமபுரம் வாசியான இக் கடல் தொழிலாளி சுண்டிக்குளம் ஆற்றில் மீன்பிடிக்கச் சென்று வீடுதிரும்பாததைக் கண்ட அவர் மனைவி கிளிநொச்சிப் பொலிஸில் புகார் செய்திருந்தார். 14 தினங்களின்பின் சுண்டிக்குளம் ஏரி ஆற்றங்கரையில் இவரது சடலம் அழுகிப் போன நிலையில் கண்டுபிடிக்

— —

### மகாகும்பாபிஷேகம்

கொழும்புத்துறை, திங்

அரியாலை ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தில் வருகிற ஞாயிற்றுக்கிழமை பகல் மகா

## 'வகுப்புவாதத்தை ஒழிக்க ஒன்று படுங்கள்'

### பிரதமர் இந்திரா வேண்டுகோள்

புதுடில்லி, ஜூன் 2 தெரிவித்துவருவதாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வகுப்புவாதத்தை ஒழிக்க ஒன்று படுங்கள்'

### பிரதமர் இந்திரா வேண்டுகோள்

புதுடில்லி, ஜுன் 2

"வகுப்புவாதங்களைத் தடுப்பதற்கு அரசியல் கட்சிகளும், பொதுமக்களும் இயக்கங்களை ஆரம்பிக்க வேண்டும். இத்திட்டத்துக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு நல்கவேண்டும். எனப்பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி புதுடில்லியில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் கேட்டுக் கொண்டார்.

வகுப்பு வன்முறையால் மக்களைத் தவறனவழியில் இட்டுச்செல்லும் சிலரின் முயற்சிகளை அவர் வன்மையாகக் கண்டித்தார். வகுப்புவாதங்களை ஒழிக்க முயலுபவர்களுக்கு நான் ஆதரவு தெரிவித்துவருவதாகச் சிலர் குற்றஞ்சாட்டுகிறார்கள். பாதிக்கப்படும் சிறுபான்மையினருக்கு நிவாரணம் அளிப்பது எனது முக்கிய கடமைகளில் ஒன்று என்று பிரதமர் சொன்னார்.

திருமதி இந்திரா காந்தி மேலும் கூறியதாவது:-

புதுக்காங்கிரஸ் கட்சிச் சார்பற்ற கட்சி. சிறுபான்மை வகுப்பினரின் உயிர்களும், உடமைகளும் பாதுகாக்கப்படவேண்டும். வகுப்பு ஒற்றுமைக்காக நாடு முழுவதும் பிரசாரம் நடத்தி இயக்கங்களை ஆரம்பித்து, வகுப்புவாதம் என்ற விஷக் கிருமியை நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்கவேண்டும்.

# போர் விமானங்களை இஸ்ரேலுக்கு அனுப்புக

### 60 அமெரிக்க செனட்டர்கள் வற்புறுத்தல்

வாஷிங்டன், ஜுன் 2

இஸ்ரேலுக்கு மேலும் ஆயுத உதவிகளை வழங்கும்படி அமெரிக்க செனட்டர்கள் இன்று செனட் சபையில் குரல் எழுப்பினர்.

உடனடியாக அமெரிக்க போர்விமானங்கள் இஸ்ரேலுக்கு அனுப்பப்பட வேண்டும் என அவர்கள் வற்புறுத்தினர்.

இஸ்ரேலும், ஐ.அ. குடியரசுத் துருப்புக்களும் நேற்று உக்கிரமான போரில் ஈடுபட்டன. 7 மணிநேரம் நீடித்த போரில் கொரிலாதலம் ஒன்று பாதித்தது. இஸ்ரேல் தரப்பில் 12 பேர்பலியானதாகவும் ஐ அ. குடியரசில் 80 பேர்மாண்டதாகவும் செய்திகள் கூறின ஐ அ. குடியரசு விமானங்களை இஸ்ரேலியர் சுட்டுவீழ்த்தினர்.

## வங்கிக் கொள்ளைக்காரா கைது

புதுடில்லி ஜுன் 2

பொலிஸ்நிலையமொன்றை தாக்கிய நக்ஸல் பாரிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கொடுகுடா காட்டுப்பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டிருந்த 36 பேரும் வங்கி, தபால் கொள்ளைகளில் சம்பந்தப்பட்டவர்கள் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு கல்கத்தா நேஷனல் கிரிண்ட்லேஸ் வங்கியிலும், ஸ்டேட்வங்கிகளிலும் நடந்த திருட்டு சம்பந்தமாகத் தேடப்பட்ட சிலர் இதில் இருக்கக் காணப்பட்டனர்.

## நிரந்தரக் காரியதரிசிகள் வெளியேறலாம்

கோட்டை, செவ்வாய்

நிரந்தர காரியதரிசிகள் உட்பட பல மாற்றங்களை புதிய அரசாங்கம் விரைவில் செய்யவிருப்பதாகத் தெரிய வருகிறது.

காரியதரிசிகள்பலர் விரைவில் இளைப்பாறுவார்களெனப் புதிய அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. அரசாங்க உத்தியோகத்திற்கு வெளியே உள்ளவர்களை இந்த இடங்களுக்கு அரசாங்கம் நியமிக்கலாமெனக்கருதப்படுகிறது.

மந்திரிசபைக் காரியதரிசிகளாக அரசாங்க உத்தியோகத்திற்கு வெளியே உள்ளவரை நியமிப்பது பற்றிய சாத்தியக் கூறுகளை அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

கூட்டுஸ்தாபனங்களைப் பொறுத்தவரையில் இ. போ. ச. தலைவர் பதவிக்கு திரு அனில்முனசிங்கா நியமிக்கப்படலாம் என தெரிய வருகிறது.

## உதவி வழங்க உத்தரவு

சென்னை, ஜுன் 2

இந்தியக் குடியுரிமை பெற்று இலங்கையிலிருந்து இந்தியா சென்று புனர்வாழ்வுக்கடனுதவி கிடையாது தவிக்கும் நான்கு குடும்பங்களுக்கு உடனடியாக கடனுதவி வழங்கும்படி இராமநாதபுரம் கலெக்டர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நாளாந்த உணவிற்கான கடனுதவிகள் வழமைபோல கொடுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

இலங்கையிலிருந்து சென்றவர்கள் பலருக்கு நெசவாலையில் வேலை வசதி செய்து கொடுக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

## வைக்கோல் சேதம்

யாழ்ப்பாணம், செவ்

ஓமந்தை, வவனியா கிளிநொச்சி, அக்கராயன்குளம், வவனிக்குளம் போன்ற விவசாய இடங்களில் பெருந்தொகையான வைக்கோல் அழிந்துவிட்டதாம் தை மாதம் தொடக்கம் அடிக்கடி மழை பெய்தபடியால் வயல்களில் புல்லு முளைத்ததாகவும், இதனால் வைக்கோலைப் பாவிக்கவேண்டிய நிலையிலிருக்கவில்லையென்றும் விவசாயிகள் இதற்குக் காரணம் கூறினர்.

வைக்கோல் வாகன மூலம் ஏற்றுமதிசெய்து யாழ்ப்பாணம் வருவதற்கும் பொலிசார் தடைவிதித்தனர். வாகனங்களில் வைக்கோல் ஏற்றுவதால் பிற வாகனங்களின் போக்குவரத்திற்கு இது தடையாகவிருக்குமென்பதற்காக இவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டதாம். (குவிம

## கவர்னர் ஜெனரல் தொடக்கி வைத்தார்

கோட்டை, செவ்வாய்

"மனித இனத்திற்கு அரிய சேவைசெய்யும் சந்தர்ப்பம் மருத்துவத்துறையில் உள்ளவர்களுக்குண்டு. மனித இனத்திற்கு இவர்கள் சேவை மிகவும் பயன்தருகின்றது.

இவ்வாறு கவர்னர்ஜெனரல் திரு வில்லியம் கோபல்லாவ நேற்று கொழும்பு மருத்துவக்கல்லூரி 100வது ஆண்டுவிழாவைத்தொடக்கி வைத்துப் பேசும் போது குறிப்பிட்டார்.

விழாவின்போது 100 அனாதைச் சிறுவர்களுக்கு மதிய போசனம் வழங்கப்பட்டது.

பிரதமருக்கு அனுப்பி உள்ள வாழ்துச் செய்தியில் சோஷலிஸத்திற்கு புதிய பாதையை திறந்துள்ள உங்களது வெற்றிக்கு எமது மக்கள் முன்னேற்றக் கட்சியின் பாராட்டுதல்களால் உங்களது வெற்றி உலகில் உள்ள எல்லா ஷேசலிஸ நாட்டினதும் வெற்றி தெரிவித்துள்ளார்.

## எனது வெற்றி மக்கள் வெற்றி

வேலணை, திங்.

நான் அடைந்த வெற்றி எனது வெற்றியல்ல. இது உங்கள் வெற்றியாகும். இவ்வெற்றியை முதன் முதலாக பாராட்டி விழா வெடுத்த பெருமையும், எனக்கு 98 வீதம் வாக்குகள் அளித்து தமிழரசுக் கட்சியை ஆதரித்த பெருமையும் சரவணையூர் மக்களையே சாரும் என பள்ளம்புலம் முருகமூர்த்தி ஆலய முன்றலில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பு விழாவின் போது ஊர்காவற்றுறைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் நன்றி கூறினார்.

திரு. நடராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவின் போது திரு. இரத்தினம் தொடர்ந்து பேசுகையில்: உண்மை, நேர்மை, சத்தியம் இவற்றிற்குத்தான் மக்கள் தீர்ப்பளித்திருக்கிறார்கள். தீவுப்பகுதி மக்களின் வெற்றி அகில இலங்கையின் வெற்றி.

மக்களின் பிரச்சனையை தீர்க்க கூடிய கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிதான். இதே கட்சி அன்று எங்களை ஏமாற்றியதால் தான் அன்று அவர்கள் ஆட்சிக்கு வரமுடியாமல் போய்விட்டது. இப்பொழுது இருக்கும் நிலை எங்களுக்குப் பாதகமானதல்ல. சாதகமானதாகும். பலம் வாய்ந்த கட்சியாக ஆட்சியில் இருப்பதால் தமிழர் பிரச்சனைக்கு அது ஆதரவளிக்கும் என்பது உறுதி.

தீவுப்பகுதி அபிவிருத்திச் சபை நிறுவவேண்டுமென்ற எனது பிரேரணையை பாராளுமன்றத்தில் ஆதரவளித்தவர்கள் இன்று ஆட்சியில் உள்ளனர். ஆதலால் முதல் விடயமாக பாராளுமன்றத்தில் இதைக் கேட்டு இத்தீவுப்பகுதி மக்களின் குறையை நீக்குவேன் என கூறினார்.

மற்றும் திரு. புதுமைலோலன், திரு. சி இராசரெத்தினம் இன்னும் பலர் பாராட்டுரை வழங்கினர்.

...யார் சங்க உறுப்பினர் பலரும் கடமையாற்றிவருவதாகவும், மற்ற ஊழியர்களைப்போன்று இவர்களும் இனமதசமய வேறுபாடின்றி வாழவும், நாட்டில் வகுப்புவாதப்பூசல் ஒழிந்து நல்லெண்ணம் நிலைநாட்டப்படுமென நம்புவதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிறுவனின் பரிதாபமரணம்

தன் நண்பர்களுடன் குளிக்கச்சென்ற 15 வயதுச்சிறுவன் 28 மணித்தியாலங்களின் பின் பிணமாகக்கரை சேர்க்கப்பட்டார். மட்டக்களப்பு கல்லடியில் இச்சம்பவம் நடந்தது.

கல்லடி பாலத்திற்கு அண்மையிலுள்ள வாவியில் தன் சகாக்களுடன் குளித்துக் கொண்டிருந்த இச்சிறுவன் ஏரியில் புதையுண்டுமாண்டதாகவும், பலத்ததேடுதலின் பின் 28 மணித்தியாலயங்களின் பின் இவர் பிணமாகக்கண்டுபிடிக்கப்பட்டுக் கரைசேர்க்கப்பட்டதாகவும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

## ஐ. மு. கட்சிகள் வேண்டுகோள்

நாட்டில் ஐக்கியமும்ஒழுங்கும் நிலவமக்கள் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டுமென்று ல. ச. ச. கட்சி, கம்யூனிஷ்ற்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியன தமது உறுப்பினர்களைக் கேட்டுள்ளன.

சிறுபான்மையினருக்கும் வர்த்தகர்களுக்கும் காடையர்களிடமிருந்து பாதுகாப்பளிக்குமாறு இக்கட்சிகளின் பிரதேச நிறுவனங்கள் கேட்கப்பட்டுள்ளன.

## ஐ. தொ. காங்கிரஸ் வாழ்த்து

"பெரும்பான்மையாகத் தெரிவு செய்யப்பட்ட கூட்டாட்சியினருக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்களையும் மற்றும் சிறுபான்மையினரையும் தங்கள் இரு கண்களைப் போன்று எண்ணி, புத்தபகவானின் போதனையை பின்பற்றி எல்லோரையும் எவ்விதபாகுபாடுமின்றி நல்வழியில் நடத்தி நாட்டில் வறுமையைப் போக்கவும்"

இவ்வாறு ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் பதுளைமாவட்டத் தலைவர் பிரதமர் சிறிமாவுக்கு அனுப்பிவைத்துள்ள செய்தியில் கூறியிருக்கிறார், நடந்து முடிந்த தேர்தலில் ஐ. தொ. கா. கூட்டாட்சியினருக்குப் பூரண ஒத்துழைப்பு அளித்துள்ளதையும் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

...செய்தியில் அரசாங்கத்திற்குத் தமது பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்குவதுடன் சிறந்த கல்வித்திட்டத்தை அமைச்சர் அமுல் நடத்துவார் என நம்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தாயகம் திரும்பினர்.


கம்பியாவில் இருந்த டாக்டர் கெலிகம இலங்கைக்கு

...அவர் மனைவி கிளிநொச்சிப் பொலிஸில் புகார் செய்திருந்தார். 14 தினங்களின்பின் சுண்டிக்குளம் ஏரி ஆற்றங்கரையில் இவரது சடலம் அழுகிப் போன நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. விசாரணை நடத்திய பொலிஸார் இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்தனர். காலஞ்சென்றவரின் மனைவியும் மகனும் சாட்சியமளித்தனர்.

## மகாகும்பாபிஷேகம்

கொழும்புத்துறை, திங்

அரியாலை ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தில் வருகிற ஞாயிற்றுக்கிழமை பகல் மகாகும்பாபிசேகம் நடைபெறும். இரவு இன்னிசை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஒருவனுடைய அறிவை அபகரித்துவிட்டால் அவனைச் சிசுநிலையில் வைப்பதாகாது; விலங்கு நிலையில் அதுவும் விலங்குகளில் எல்லாம் அதிகத் துஷ்டத்தனமான விலங்கின் நிலையில் வைப்பதேயாகும்.

— ஆர்னட்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams "EELANADU" Jaffna.
Post Box 49, Jaffna. Telephone 389.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் வைகாசி மாதம் 20-ந் திகதி (3-6-70)


## அவசரமான பிரச்னை

நாட்டில் அதிகரித்து வரும் வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்கவேண்டியது மிக அவசரமான விஷயமாகும். ஏற்கனவே படித்த வாலிபர்களில் பலர் வேலையில்லாமல் திகைப்புற்று வாழ்க்கை நடத்த வகையின்றி தவிக்கின்றனர். இவர்களது எண்ணிக்கை வருடத்துக்கு வருடம் அதிகரித்துக்கொண்டு போகின்றது. நாட்டின் செல்வங்களான இவ் வாலிபர்கள் மனமுடைந்துபோயின், அவர்கள் கூடாதவழிகளில் சென்று நாட்டுக்கே நாசமேற்படுவதாக இருக்கும். இதையெல்லாம் கருதியே ''வேலைவாய்ப்பு'' என்ற புதிய இலாகாவை சிருஷ்டித்து அந்தப் பொறுப்பை பிரதமர் அவர்களே ஏற்றிருக்கின்றார் இந்தப் பிரச்னையைத் தீர்க்க பிரதமர் எல்லா முயற்சிகளும் எடுப்பாரென்றே எதிர்பார்க்கலாம்

ஆனால் இன்றைய பொருளாதார அமைப்பில் இப்பிரச்னையைத் திருப்திகரமாகத் தீர்ப்பதென்பது மிகவும் கடினம். சோஷலிச அடிப்படையிலே நாட்டின் பொருளாதாரம் மாற்றப்பட்டால்தான் பயமுறுத்தும் இந்தப் பிரச்னையைத் தீர்க்க வழிபிறக்கக்கூடும். புதிய கூட்டு அரசாங்கம் எந்தமுறையில் இதைத் தீர்க்க முற்படப்போகின்றதென்பது கூடிய சீக்கிரம் தெரியக்கூடும். இங்குள்ள மனித சக்தியைப் பூரணமாக நாட்டின் நலனுக்குப் பயன்படுத்தக்கூடிய திட்டங்கள் தேவை பேறுஒட்டிகளை உற்பத்திசெய்யும் இப்போதுள்ள கல்விமுறையையும் அடியோடு மாற்றி அமைக்க வேண்டியிருக்கும். இந்த முக்கியமான தேசியப் பணிக்கு பொதுமக்களின் ஆதரவு புதிய அரசாங்கத்துக்குப் பூரணமாகக் கிடைத்தாலே இதை சமாளிப்பதில் வெற்றிகாணமுடியும்,

இது அரசாங்கத்தின் கடமை என்று சும்மா இராமல், ஆங்காங்குள்ள பொதுமக்களும், சிறப்பாக தமிழ்ப்பகுதிகளில் வாழும் மக்களும் இந்தப் பிரச்னையைத் தீர்க்கும் வழிவகைகளைப் பற்றி விசேஷ குழுக்கள் அமைத்து ஆராய வேண்டும். அவ்வப்போது அரசாங்கத்துடனும் தொடர்புகொண்டு கூடுமான வரை இப் பிரச்னையைத் தீர்க்க வழிவகைகளை அரசாங்க உதவியுடனே அன்றி அது இல்லாமலோ செய்து கொள்ளவேண்டும். பிரச்னை மலைபோன்றதாகத் தோன்றினும், மனமுண்டானால் நிச்சயம் வழியுண்டு தமிழ்ப் பிரதிநிதிகள் தங்கள் பழைய வேற்றுமைகளை மறந்து, இந்த அவசரப் பிரச்னையைத் தீர்க்க ஆக்க வழிகளில் கவனம்செலுத்துவதுடன், புதிய அரசாங்கத்திடமிருந்து கூடுமான உதவிகளையும் பெற ஒத்துழைப்பது இப்பகுதிகளுக்கு மட்டுமன்றி நாட்டுக்கும் நன்மையளிப்பதாக இருக்கும்.

## பொது மக்களுடன் உறவு

தமது மந்திரிகள் பொது மக்களுடன் நெருங்கிய உறவுகள் வைத்துக் கொண்டு, அவர்களது குறைகளை நேரில் அறிய வேண்டுமென்று பிரதமர் ஸ்ரீமாவோ நல்லதோர் யோசனையைக் கூறியுள்ளார். தேசிய அரசாங்கம் இவ்வித நெருங்கிய உறவை நடத்தி; அதன் மூலமும் பொதுஜனத் தொடர்பை வளர்த்துக் கொண்டார். சில பத்திரிகை ஸ்தாபனங்கள் தேர்தலுக்கு முன் எவ்வித மனப்பான்மை கொண்டிருப்பினும், பொது மக்கள் தேர்தல் மூலம் அளித்துள்ள முக்கிய தீர்ப்பை அறிந்த பின், நாட்டின் மேலான

# அரசியல் அமைப்பு மாறும் வரை தமிழ் மக்களுக்குச் சுதந்திரம் இல்லை

ஞான. சுப்பிரமணியம்

சனநாயகம் என்பது சனங்களாசனங்களுடைய நலன் பொருட்டு சனங்களுக்காக ஆட்சி நடப்பதாகும். சனநாயகத்திலே ஒரு சாதி ஆளுவோராகவும் மறுசாதிகள் ஆளப்படுவோராகவும் நிலையாக இருத்தல் முடியாது. நாட்டு நலன் கருதி ஒரு சிலர் ஆள்வோராக இருக்கவேண்டியது முறைதான். அவரும் மக்களால் தெரிவு செய்யப்பட்டு மக்களின் எண்ணப்படியே சில காலத்திற்கு ஆட்சி புரிபவராக இருப்பார். கால முடிவில் அவரினிடத்திற்கு மக்கள் விரும்பியவர்களைத் தெரிவுசெய்து நியமிப்பர். சனநாயக நாட்டிலே மக்கள்தாம் மன்னராவர். நிலையாக ஒரு பகுதியார் ஆட்சி செய்வது சர்வாதிகாரமாகும்' அங்கே மக்களுக்குச் சுதந்திரம் என்பது இல்லாதொழியும் உண்ண உணவும், உடுக்க உடையும் இருக்க இல்லமும் மக்களுக்குக் குறைவறக் கிடைக்க வேண்டியது முறை. இவை குறைவறக் கிடைத்தும் சுதந்திரமின்றி வாழ்வதிலே அறிவுடையோர் ஒருபோதும் நிம்மதியடையார். உடலுக்குக் கிடைக்கும் சுகத்திலும் உளத்திற்குக் கிடைக்கும் சுகமே தலைசிறந்தது. கூண்டிலே அடைபட்டுக்கிடக்கும் கிளிக்கு எவ்வளவோ வசதிகளைச் செய்து சுகவாழ்க்கை வாழ வழிவகுத்தாலும்கூண்டிலிருந்து வெளியேறி எப்போது தப்பியோடலாமென்றேஅது ஏங்கி நிற்கும் சுதந்திரம்தான் எவர்க்கும் முக்கியம். மக்களுக்கும் வேண்டியவற்றைக் குறைவறக் கொடுத்து சுதந்திரத்தைமறுக்கும் அரசியலை மக்கள் வேண்டார். அவ்வரசியலை ஒழித்துக்கட்டவே கங்கணம் கட்டிநிற்பர்.

இன்றை இலங்கையிலே தமிழ் பேசும் மக்களின் நிலை கூண்டுக்கிளியின் நிலையையே ஒத்துளது. அவர் தமது தாய்நாட்டிலே சிங்களவரைப் போன்று முதற் பிரஜையாய் வாழ வேண்டிய உரிமை மறுக்கப்பட்டுளது. 100 கரு 69 வீதம் உள்ள சிங்களர் ஆளுஞ் சாயாராகவும் 31 வீதம் தமிழ்ப்பேசும் மக்கள் ஆளப்படுவோராகவும் மாறிவிட்டனர். 157 பேர் கொண்ட ஆட்சிமன்றத்திலே 100க்கு 31 வீதமாவது பிரதி நிதித்துவம்பெற வேண்டிய தமிழ்ப் பேசும் மக்கள் ஏறக்குறைய 16 வீதமே பிரதி நிதித்துவம் உடையர். உயர்தர உத்தியோகப்பதவிகளிலே 100க்கு 1வீதமாவது தமிழ் பேசும் மக்களுக்கில்லை. தேசாதிபதி பிரதமந்திரி சுப்பிரீம் கோட் பிரதமநீதிபதி பட்டாளப் பிரதம தளபதி சர்வகலாசாலை அதிபர்பதவிகள்தமிழ் பேசும் மக்களுக்குஒருபோதுமில்லை. இவையெல்லாம் சிங்கள கொய்கம பவுத்தர்களுக்கே 'றிசேவ்' செய்யப்பட்டுள்ள ஏதோ சில சில்லறை உத்தியோகங்கள்தான் கிடைக்கும் அதுவும் சிங்களமொழியிலே தேர்ச்சியடையாவிடின் பறிமுதலாகும்; எப்படியிருக்கிறது இலங்கையிலே சனநாயகத்தின் நிலைமை? தமிழ்பேசும் மக்கள் வாயில்லாப் பூச்சிகளாக மாறிக்கொண்டு வருகின்றனர். நிலைமையைச்சீர்படுத்த முயன்று முயன்று களைத்து விட்டனர் இதனால் ஒற்றுமையும் குலைந்துபோயிற்று சிலர் சிங்களரையண்டித்தொழுது விழுது தமது சொந்தக்காரியத்தைப் பெற்று வாழமுனைகின்றனர் என்றாலும் ஒருசிலர் நியாயத்தை விளக்கிஉரிமைபெற முனைகின்றார் தாம் இவர்களில் ஒரு சிலர் முட்டுக்கட்டை போடும் போது அவர்தாம் என் செய்வர்.

இந்த அவல நிலைமை உண்டானதிற்குக் காரணம் அரசியலமைப்பேயாகும். இந்த அரசியல் அமைப்பானது மாற்றியமைக்கப்படும்வரைக்கும் இங்கே தமிழ்பேசும் மக்களுக்குச் சுதந்திரம் கிடைப்பது அரிது ஆளுவோர், ஆளப்படுவோர் என்ற நிலைமைமாறி, யாவரும் சம உரிமை உடையர் என்ற நிலை உண்டாக வேண்டும். ஒருநாட்டிலே ஒரு சாதியார் கைக்கு அதிகாரம் போனபின் அவா அதைக் கட்டிக் காப்பதற்காகவே நடவடிக்கை எடுப்பர். மற்றையோர்க்கும் அந்த அதிகாரத்திலே பங்குகொடுக்க விரும்பார் மற்றையோரை அடக்கி வைத்திருக்கவே வழிவகைகளைத் தேடுவர். அதிகார உருசி பெற்றவர்கள் நீதிநியாயத்தைமறந்திடுவர், தாம்கைய[illegible]

என்பதைப் பெரும்பான்மையர் உணரவேண்டும். அதன் பெறுபேறு இந்தியாவும் பாகிஸ்தானும் போன்றே இரு பகைமை நாடுகள் காலப்போக்கிலே சின்னஞ் சிறிய இலங்கையிலே உருவாகிவிடும் என்பதாகும். இந்தப் பிரிவினை நிலைமை சிங்களச் சாதியினர்க்கே பெரிய பாதகத்தைதை விளைவிக்கும். ஆதலினாலே 100 ஆண்டுகளுக்குப் பின்னரும் இரு சாதியினரும் இலங்கையிலே உடன்பிறப்பாளர் போன்று வாழுவதற்கு இப்போதே வழி வகுத்து வைக்கவேண்டியது இப்போதுள்ள தலைவர்கள் கடனாகும் இவர்கள் வருங்கால மக்கள் சுமுகமாக வாழ்வதற்கு இன்றே திட்டங்கள் வகுக்கவேண்டியவராவார். இதுவே அரசியல் ஞானமாகும். ஒரு கட்சி இன்னொரு கட்சி மேல் வசைபாடித் திட்டுவதனாலே ஒற்றுமையான நல்ல இலங்கையை உருவாக்க முடியாது.

இலங்கையில் சிங்களம் பேசுவோர் 100க்கு 69 வீதத்தினர் ஆகவும் தமிழ் பேசுவோர் 31 வீதத்தினர் ஆகவும் வசிக்கின்றனர். 157 பேர் கொண்ட பாராளுமன்றத்திலே 108 சிங்களவரும் 49 சிங்களரல்லாதவரும் பிரதிநிதிகளாயிருக்க வேண்டியது முறை உயர்ந்த உத்தியோகங்களிலே கணிசமான பிரதிநிதித்துவம் தமிழ்பேசும் மக்களுக்குக் கொடுக்கவேண்டியது முறை. இலங்கை முழுவதிலும் சிங்களத்தைப் போலே தமிழ் மொழிக்கும் உரிமை கொடுக்கவேண்டியது முறை. இலங்கைத் தேசாதிபதியாக தமிழ் பேசுபவர் ஒருவர் நியமனம் பெற உரிமை உடையர். அதுவே முறையுமாகும். சிறுபான்மை மொழியினர் ஒருவரைத் தேசாதிபதியாய் நியமிப்பது பெரும் புத்திசாலித்தனமான செய்கையாகும். சிறுபான்மையினரின் அன்பைப் பெறுவதற்கு வாய்ப்பான செய்கையாகும். இவைகளை விடுத்து இலங்கை முழுவதையும் சிங்களமயமாக்கும் எண்ணம், சிந்தனை, செய்கை, திட்டம் எல்லாம் விழலாகும். ஒருபோதும் நடைபெறுது சிங்களவர்

## 'சங்கீதம் கடலைப் போன்றது'

— சித்தூரார்

யாழ்ப்பாணம். புதன் 'சங்கீதம் பெரியகடலைப் போன்றது. பெரிய பாத்திரமான குடத்தைக்கொண்டும் பேணிபோன்ற சிறு பாத்திரத்திலும் கடல் நீரைப் பெற்றுக்கொள்ளலாம்.

குரு சிஷ்ய முறையில் கற்றுப் பெறவேண்டிய சொத்து சங்கீதம், நம் முன்னோர் அவ்வாறே மிக்க பயபக்தியுடன் இசைக்கலையைப் பயின்றனர். இசைக்கலை யாருக்கும் தனியுடைமையன்று. குரு சிஷ்ய முறையில் பக்தியுடன் பயின்றால் இக்கலை கலைஞனிடம் வளம் பெற்று நிலைக்கும்'

யாழ், வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செல்வி வைரவநாதன் பிரேமாவதியின் இசை அரங்கேற்றத்தில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கிய இராமநாதன் இசைக்கல்லூரி அதிபர் சித்தூர் சுப்பிரமணியபிள்ளை தலைமைவகித்தார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அடையாறு கர்நாடக சங்கீதக் கல்லூரி இசை ஆசிரியரான தஞ்சாவூர் எம், தியாகராசன் தமது மாணவியான செல்வி பிரேமாவதி இசைத் துறையில் இந்நாட்டில் புகழ் ஈட்டுவார் எனத் தாம் நம்புவதாகா கூறினார்

சங்கானை மகாவித்தியாலய அதிபர் திரு. பரம்தில்லைராஜா பேசியதாவது:-

'பாடசாலைகளில் இன்று சங்கீதம் படிப்பிப்போருக்கு இடவசதிக் குறையிருக்கிறது நுண்கலைகளை நாம் போற்றிப் பேணவேண்டும். மக்கள் [illegible]ஞரைப் பொருளா தார[illegible] ஊக்கம் செய்வதோடு பாடசாலைகளில் சங்கீதம் படிக்க முறையான ஒழுங்குகளும் [illegible] வேண்டும். [illegible] மனி[illegible]லத்திற்குக் கிடைத்து

## ஜயாறன் எழுதுவது:

''சென்னையிலே ஒரு வாத்தியத்தைக் கேட்டோம். அதன் பெயர்... நாகா... நாகா... ஆமாம் நாகசுரம். எங்கள் மனதை அப்படியே கவர்ந்துவிட்டது. நாங்கள் அமெரிக்காவுக்குத் திரும்பும்போது ஒரு நாகசுர வாத்தியத்தை வாங்கிக்கொண்டு போகப்போகிறோம்...''

என்றிவ்வாறு யாழ்ப்பாணம் வந்திருந்த ஐந்து அமெரிக்க கலைஞர்களடங்கிய 'டோரியன்' இசைக் குழுவினர் தெரிவித்து இங்கு அந்த வாத்தியம் உண்டா? என்று ஆவலுடன் கேட்டனர்! இது தமிழருக்கே உரிய விசேஷ வாத்தியம் என்றும், இங்கு நாகசுர இசைக் கலைஞர்கள் அதிகம் உண்டென்றும் தெரிவிக்கவே, வந்தவர்கள் யாழ்ப்பாணத்தைப் பற்றி அதிக மதிப்புக்கொண்டார்கள்.

அமெரிக்கர் மட்டுமல்ல, ரஷ்யர், சீனர் உள்ளிட்டு வேறெந்த நாட்டினரையும் வசப்படுத்திவிடக்கூடிய வாத்தியம் நாகசுரம் இங்குள்ள நாகசுர வித்துவான்களில் சிலரைப் பல வெளிநாடுகளுக்கும் புதிய அரசாங்கம் அனுப்பிவைத்தால் கலாசார உறவுகள் பலப்படுவதுடன், ஈழத்தின் மதிப்பும் உலகில் ஓங்குவதாக இருக்கும்.

''உங்கள் நாட்டிலே நாகசுரவாத்தியத்துக்கு ஆதரவு இருக்குமா?'' என்று அக்கலைஞரில் ஒருவரைக் கேட்டதற்கு, அதிகம் இருக்கும் என்று தெரிவித்தார். நமது நாகசுரக் கலைஞர்கள் வெளிநாட்டினரைக் கவரக்கூடிய புதிய புதிய மெட்டுகளில் பாட்டுகளைப் பயின்றால் அவர்களுக்கு உலகில் அதிக வாய்ப்புக் காத்துள்ளது என்பதை உணர்ந்தேன்.

0 0 0

நேற்று முன்தினம் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் அக்குழுவினரின் கச்சேரி சுமார் 2 மணி நேரம் நடந்தது. ஐந்து பேரும் சேர்ந்து விதவிதமான குழல் வாத்தியங்கள் வாசித்தனர். இதற்குச் சாகித்தியம் ஏதும் உண்டா என்று கேட்டதற்கு அப்படி எதுவுமில்லை என்று ஓரன்பர் தெரிவித்தார். இசைக் குறிகள் அடங்கிய அட்டைகளைப் பார்த்துக்கொண்டேதான் வாசிக்கின்றனர். சற்றே ஓர் அட்டை காற்றில் நடுவிலே விழுந்துவிட்டதால், அப்பாட்டை மீண்டும் ஆரம்பத்திலிருந்து வாசிக்கவேண்டியதாயிற்று.

மானிப்பாய் ஆஸ்பத்திரி டாக்டர் கங்காதரன், புல்லாங்குழலில் பலபல ராகங்களில் பின்னர் வாசித்துக் காட்டியதும் வந்தவர்கள் பெரிதும் ரசித்தனர். அவர்களது குழல் வாத்தியம், 'எவர்சில்வரால்' செய்யப்பட்டது. விலை மதிப்புள்ளது. ஆனால் ஒரு துவாரத்தில் ஒரேயொரு நாதம்தான் கேட்கும். ஆனால் நமது புல்லாங்குழலிலே ஒரு துவாரம் மூலம் மூன்று ஸ்வரஸ்தாயிகளைக் கேட்கலாமென்றும், இதே வாத்தியத்தின் விலையே, ஓர் அமெரிக்க சென்ட் தான் இருக்குமென்றும், அரசாங்க அதிபர் பெருமையுடன் வந்தவர்களுக்கு அறிவுறுத்தினர்.

தமிழரின் கலைக்கருவிகள், கலைஞர்கள் இவர்களின் மதிப்பு உலகத்திலே பரவக்கூடிய காலம் நெருங்கிவருகிறதென்பதை உணர்ந்தேன்.

0 0 0

தேர்தலுக்கு முன் ஒரு சோதிடர் வந்து, கிரகங்களைப்பற்றி எல்லாம் ஆராய்ந்து நல்ல முடிவுதான் கிடைக்குமென்றும், தேர்தலில் ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருக்கிறது என்றெல்லாம் எழுதித்தந்திருந்தார். மூன்று கட்சிகள் ஆட்சிக்கு வருமென்றிருந்த அந்தக் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தேன். பின்புறம் யு. என். பி தான் தேர்தலில் வென்று ஆட்சிப் பொறுப்பை ஏற்குமென்று குறிப்பிடப்பட்டிருந்தது. அப்படிப் பின்புறம் எழுதியிராவிட்டால் ''என் சோதிடம் பலித்துவிட்டது'' என்றும் அவர் கூறலாம். இத்தேர்தல் முடிவு பெரிய அதிர்ச்சிதானே.

0 0 0

உருளும் போதறிவொண்ணுவுலகத்தீர், தெருளுஞ் சிக்கெனத் தீவினை சேராதே, இருளறுத்து நின்று ஈசனென்பார்க்கெல்லாம் அருள் கொடுத்திடும் ஆனைக்கா அண்ணலே. அப்பர் அடிகள்

## பண்டிதருக்கு வரவேற்பு

## அந்தோனியார் திருநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளது குறைகளை நேரில் அறிய வேண்டுமென்று பிரதமர் ஸ்ரீமாவோ நல்ல தோர் யோசனையைக் கூறியுள்ளார். தேசிய அரசாங்கம் இவ்வித நெருங்கிய உறவை பொதுமக்களுடன் வைத்துக் கொள்ளத் தவறியது தான் பொதுத் தேர்தலில் அவர்கள் தோல்வி அடைந்ததற்கு முக்கிய காரணம் என்றும் அவர் சரியாகச் சுட்டிக் காட்டியுள்ளார். அமைச்சர்களை நேரில் கண்டு தங்கள் குறைகளைத் தெரிவித்து பரிகாரம் தேட பொது மக்களுக்கு வாய்ப்பு இருந்திருப்பின் சென்ற அரசாங்கம் பொது மக்களின் அதிருப்தியை இவ்வளவு அதிகமாகப்பெற்றிராமல் போயிருக்கலாம். புதிய அரசாங்கம் பொதுமக்கள் தொடர்பை அதிகமாகப் பெறுமாயின் அது பல விதங்களிலும் வரவேற்கத்தக்கது.

காலஞ்சென்ற பெரிய பண்டாரநாயகா பிரதமராக இருந்த காலத்தில் பத்திரிகையாளர்களுடன் வாராவாரம் மகாநாடு ங்கள் தேர்தலுக்கு முன் எவ்வித மனப்பான்மை கொண்டிருப்பினும், பொது மக்கள் தேர்தல் மூலம் அளித்துள்ள முக்கிய தீர்ப்பை அறிந்த பின், நாட்டின் மேலான நன்மையைக் கருதி, இப்போதுள்ள அரசாங்கத்துக்குக் கூடுமான ஆதரவை அளிக்க வேண்டிய அவசியத்தை அதிகம் உணர்ந்திருக்க வேண்டும். இது எப்படியிருப்பினும், பத்திரிகை ஆசிரியர்கள் நிர்வாகிகள் முதலியவர்களை பிரதமர் மாதம் ஒரு முறையாவது அழைத்துப்பேசி, கேள்விகளுக்கு விடையளிப்பதன் மூலம் பொது மக்களின் சந்தேகங்களைத் தீர்த்து அவர்களுடன் நெருங்கிய உறவை பலப்படுத்திக் கொள்வது, நல்ல பலனை அளிக்கக் கூடியதாக இருக்கும். பொது மக்களுக்கு நன்மையே செய்ய வேண்டுமென்ற நோக்கத்திலே எல்லாப் பத்திரிகைகளும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க மறுக்க மாட்டா.

## "நிபந்தனையின்றி தமிழ்க்கட்சிகள் ஒத்துழைப்பு நல்க வேண்டும்"

### வேலையற்ற பட்டதாரிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய் சிங்கள மக்கள் நூற்றுக்கு நூறு வீதம் முற்போக்கு சக்திகளை வெற்றிபெறச்செய்து அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் இந்த வகையில் தமிழ் மக்கள் தேசியரீதியான முற்போக்கு சக்திகளின் வெற்றிக்குக் குழி தோண்டியிருப்பது எமது துர் அதிர்ஷ்டமே என்று சொல்வதைத் தவிர வேறு வார்த்தையில்லை. எனினும் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்க்கட்சிகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் உண்மையான அக்கறை யிருப்பின் எவ்வித நிபந்தனையுமற்ற முறையில் கூட்டணி அரசாங்கத்துக்கு ஆதரவு நல்க வேண்டும். தேசிய பொருளாதார பிரச்னை தீர்க்கப்படும் பட்சத்தில் ஏனைய பிரச்னைகளும் சுலபமாகத் தீர்த்துவைக்கப்படும். இவ்வாறு வேலையற்ற பட்டதாரி சங்கம் பத்திரிகைக்கு விடுத்த செய்தி ஒன்றில் கூறியுள்ளது.

மேலும் அச்செய்தியில் கூறியுள்ளதாவது: மொழிப் பிரச்னை, பொருளாதாரப் பிரச்னை ஆகியவற்றை சுமூகமா முறையில் கூட்டணி அரசாங்கம் தீர்த்து வைத்த எல்லோரதும் நல்லாதரவையும், நம்பிக்கையையும் தொடர்ந்து உறுதிப் படுத்தும் என நம்புகின்றோம்.

தூங்கி கிடக்கும் இலங்கையின் பொருளாதாரத் திற்கும், வாழத்துடிக்கும் இளம் சந்ததியினருக்கும் கூட்டணி அரசாங்கம் வழி காட்டும் என நம்புகின்றோம்.

— —

## மகா கும்பாபிஷேகம்

கொழும்பு, செவ். கொழும்பு சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் ஜீரணோத்தாரண அஷ்ட பந்தன மகாகும்பாபிசேகம் இம்மாதம் 24-ம் திகதி நடைபெறும். இக் கோயில் திருப்பணி செய்யப்பட்டு கும்பாபிஷேகம் 19-ம் திகதி தொடங்கி 24-ம் திகதி வரை நடைபெறும்.

இப் பத்திரிகை "ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதியில் 63-ம் இலக்க அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூன் மாதம் 3-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

நடைபெற்ற செல்வி வைரவநாதன் பிரேமாவதியின் இசை அரங்கேற்றத்தில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கிய இராமநாதன் இசைக்கல்லூரி அதிபர் சித்தூர் சுப்பிரமணியபிள்ளை மேற்கண்டவாறு கூறினர்

விழாவுக்கு நியாயவாதி எஸ். ஆர். கனகநாயகம்

தாரத்தில் ஊக்கம் செய்வதோடு பாடசாலைகளில் சங்கீதம் படிக்க முறையான ஒழுங்குகளும் செய்யப்பட வேண்டும். இசைக்கலை மனிதகுலத்திற்குக் கிடைத்துள்ள ஒரு கொடை இதை நாம் இந்த ஜென்மத்தில் இனிது பேணவேண்டும்'

(கு. வி. ம)

## 'என்கணவர் பலசாலி என்பதை நன்கு அறிவேன்'

### தாலிக்கொடி அறுக்க முயன்ற வழக்கில் ஆசிரியை சாட்சியம்

மட்டுவில், செவ்வாய் 'முதலாம் எதிரியின் பலத்தைப்பற்றி எனக்குத் தெரியாது ஆனல் என் கணவர் பலசாலி என்பதை நான் நன்கு அறிவேன். எதிரிகள் என் கணவரை இருமுறை பொல்லால் தாக்கியபோது என் கணவர் அவற்றை அலட்சியமாகத் தடுத்து விட்டார். அதன் பின்தான் எதிரி என் கன்னத்தில் கையால் அறைந்தார் பின் தாலிக்கொடியை அறுக்க முயன்றூர். இரண்டாம் எதிரி என்குடையைப்பறித்து காலுக்குள் போட்டு மிதித்து முறித்தெறிந்தார்''

ஒரு தலைமை ஆசிரியரையும் உதவி ஆசிரியையான அவர் மனைவியையும் வழிமறித்து தாக்கி தாலிக்கொடியையும் அறுக்கமுயன்றதாகத் தொடரப்பட்ட வழக்கில் சாட்சியமளித்த உதவி ஆசிரியையான இராசம்மா சாவகச்சேரி மாஜிஸ்திரேட் முன்னிலையில் மேற்கண்டவாறு கூறினர்.

சாவகச்சேரிப் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்டு, மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த வழக்கில் சாவகச்சேரி கெருடாவிலைச் சேர்ந்த சரஸ்வதி வித்தியாசாலைத் தலைமை ஆசிரியையான சிவக்கொழுந்தும் அவர் மனைவியான தங்கம்மாவும், கடந்த டிசம்பர் மாதம் 2-ம் திகதி பாடசாலையை விட்டு வீடு நோக்கிப் புறப்படும் போது, அதே ஊரைச்சேர்ந்த என். கனகர், வீமன் என்றழைக்கப்படும் ஏ. வேலாயுதபிள்ளை ஆகிய இருவரும் அவர்களை வழிமறித்துத்தாக்கி குடையைப் பறித்து முறித்தெறிந்து தாலிக்கொடியையும் அறுக்க முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. வி. செல்லத்தம்பியின் அனுசரணையுடன் அட்வக்கேட் திரு. செறுபிம் ஆஜராகியிருந்தார். பொலிஸ் தரப்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராகியிருந்தார். ஆசிரியைதங்கம்மா தொடர்ந்து தமது சாட்சியத்தில் கூறியதாவது.

சம்பவதினம் எனது கணவரும், கெருடாவில் சரஸ்வதி வித்தியாசாலைத் தலைமை ஆசிரியருமான சின்னையா சிவக்கொழுந்து என்பவரும் அதேபாடசாலையின் உதவிஆசிரியையான நானும் தங்கமுத்து ரீச்சரும் மாலை சுமார் 2 மணியளவில் பாடசாலையை விட்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டோம் வீதியில் சுமார் ஐந்து யார் தூரம் போயிருப்போம் எதிரிகள் இருவரும் எம்மை நோக்கி எதிர்ப்புறத்திலிருந்து வந்தார்கள்.

முதலாம் எதிரி என் கணவரின் தலையில் கையிலிருந்த பொல்லால் இருமுறை தாக்கினர், உடனே என் கணவர் அதை தன் கைகளால் தடுத்து விட்டார். அப்பொழு 2-ம் எதிரி என்னிடமிருந்த குடையைப்பறித்து, காலினுள்போட்டு முறித்தெறிந்தார், பின்முதலாம் எதிரி அதே பொல்லால் என்தலையில் அடித்தார். நானும் அதைத் தடுத்து விட்டேன் பின் தன்கையால் என் கன்னத்தில் அடித்தார். தாலிக்கொடியை அறுக்க முயன்றூர். நானும் கணவரும் தாலிக்கொடியை அறுக்க விடாதுஇறுகப்பிடித்தோம்.

நாம் சத்தம் போட்டதையடுத்து அயலுலுள்ளவர்கள் அங்கு வரவே எதிரிகள் ஓடிவிட்டார்கள் பின் நாம் லொறி ஒன்றில் ஏறி கனகம் புளியடிச் சந்திக்குச் சென்று அங்கிருந்து பஸ் மூலம் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு செய்தோம்இக்கட்டத்தில் மாஜிஸ்திரேட் மேல் விசாரணையை இம்மாதம் 29-ம் திகதிவரை ஒத்தி வைத்தார்

காரத்திலே பங்குகொண்டு விரும்பார் மற்றையோரை அடக்கி வைத்திருக்கவே வழிவகைகளைத் தேடுவர். அதிகார உருசி பெற்றவர்கள் நீதிநியாயத்தைமறந்திடுவர், தாம்கையாளும் நடவடிக்கைகள் தாம் நாட்டு நலனுக்கு ஏற்றவை என வாதம் பேசுவர். அந்நாட்டிலே அடக்குமுறை தாண்டவமாடும். இதனாலே, அந்நாட்டிலே ஒற்றுமையின்மையும், வகுப்புவாதங்களும், வகுப்புக் கலவரங்களும் தலைவிரித்தாடும். சண்டைகள், உள்நாட்டு யுத்தங்கள், பெரும் போர்கள் எல்லாம் உண்டாவதற்குக் காரணம் அடக்குமுறைதான். இதற்கு காலமும் சந்தர்ப்பங்களும் உதவி புரிகின்றன. வலியோர் மெலியோராதலும், மெலியோர் வலியோராதலும் காலவகையினாலே உண்டாகின்றன ஒரு நாட்டில் வாழும் பல்வேறு சாதியினர்க்கிடையிலேஒற்றுமை நிலவாவிடின் அந் நாடு எவ்வகையிலும் உருப்படாது. ஒரு மரத்தின் ஒரு கொம்பர் பழுதுறின் அது அம் மரத்தையேகெடுத்து விடும்

சிங்களம் பேசும்வோர் பெரும்பான்மையினர் தமிழ் பேசுவோர், சிறுபான்மையினர். சிறுபான்மையினரது பயத்தையும், சந்தேகத்தையும் போக்க வழிவகைதேட வேண்டியது முக்கியகடனாகும் சிறுபான்மையினரது கூட்டுறவின்றிப் பெரும்பான்மையரை விருத்தியடைய முடியாதென்பதைப் பெரும்பான்மையர் உணர வேண்டும்.

சிறுபான்மையரது உள்ளத்திலே பெரும்பான்மையர் மீது கொண்ட வெறுப்பானது வேரூன்றிமுற்றிவிடுமாயின் காலப்போக்கிலே பெரும்பான்மையருக்கே பெரும் கேடு விளைவிக்கக் கூடிய நிலைமையை உண்டாக்கிவிடும் என்பது சரித்திரம் கண்ட உண்மையாகும் இலங்கையிலே தமிழ்பேசும் மக்கள் பெரும்பாலும் வடக்குக் கிழக்குப் பாகங்களிலும் சிங்களம் பேசுவோர் ஏனைய பாகங்களிலும் தனித்து வாழுகின்றனர். ஒரு சிலர் அங்குமிங்குமாகக் கலந்து வாழ்கின்றனர் எனினும் ஒவ்வொருத்தருக்கும் தனியான சொந்தமான பாகம் உண்டு என்பதைப் பெரும்பான்மையர் உணர வேண்டும். ஒரு பகுதியாருக்கும் பகைமை முற்றி வயிரிக்கும்போது காலமும் இடமும் நிலைமையும் முற்றும் மாறுபடுங்காலத்திலே இருபகுதியாரும் பிரிந்து வெவ்வேறு அரசியலை அமைத்து வாழவேண்டிய கட்டாயம் உண்டாகும்

செய்கையாகும். இவைகளை விடுத்து இலங்கை முழுவதையும் சிங்களமயமாக்கும் எண்ணம், சிந்தனை, செய்கை, திட்டம் எல்லாம் விழலாகும். ஒருபோதும் நடைபெருது சிங்களவர் மத்தியில் வாழும் இலட்சக் கணக்கான முஸ்லிம் மக்களே. சிங்களமயமாகாது இன்றும் தமது தாய்மொழியாம் தமிழைக் கடிக் காத்து பாதுகாத்து வரும்போது வடக்கு கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் பேசும் மக்கள் சிங்களமயமாவர் என்பது மூடரின் கனவாகும். உண்மையிலே இலங்கையிலே முஸ்லிம் மக்கள் தமிழை வளர்த்தது போல பிறர் எவரும் வளர்க்கவில்லை என்று துணிந்து கூறலாம்.

சில தமிழ்பேசும் மக்கள் இலங்கையிலே சென்ற சில ஆண்டுகளாக நாடற்றவராக வாழ்கின்றனர். அவர்கள் முன்னே பாராளுமன்றத்துக்குத் தமது பிரதிநிதிகளாக 8 பேரை அனுப்பி வந்தனர். அவர்களுக்கு இந்த உரிமை இப்போது மறுக்கப்பட்டுள்ளது. அவர்கள் இந்திய அரசியல் சட்டத்துக்கு முரண்படாது தாமாகவே விரும்பி இந்தியாவுக்கும் போகலாமே யொழிய கட்டாயப்படுத்தி அவர்களை இந்தியாவுக்கு அனுப்பமுடியாது, இரு நாடுகளையும் ஊவாக்கடல் பிரிக்கின்றது. நாடற்ற மக்களை அனுப்பமுடியாவிடின் அவர்கள் இலங்கைக்கே உரியவர்கள், அவர்கள் விரும்பாவிடின் எந்த உடன்படிக்கையும் பயனற்றதாகும்

— —

## எம். ஸி.க்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், புதன் நேற்றிரவு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த நியமன எம் பி திரு எம் ஸி சுப்பிரமணியத்துக்கு யாழ் ரயில் நிலையத்தில் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது ''சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு விடிவு ஏற்பட்டுவிட்டது'' என்று திரு எம். ஸி, நன்றி தெரிவித்து பேசுகையில் கூறினர் அவரது இல்லம்வரை ஊர்வலமாக அவர் அழைத்துச்செல்லப்பட்டார். (தே நி)

புதுடில்லி ஜூன் 2 வண்டலூர் ஸ்ரான்டேட் மோட்டார் கம்பனியை மீண்டும் திறந்து நடத்துவதற்கான நடவடிக்கையில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளது.

ஒரன்பர் தெரிவித்தார். இசைக் குறிகள் அடங்கிய அட்டைகளைப் பார்த்துக்

னென்பார்க்கெல்லாம் அருள் கொடுத்திடும் ஆனைக்கா அண்ணலே. அப்பர் அடிகள்

## பண்டிதருக்கு வரவேற்பு

ஊர்காவற்றுறை, செவ் நேற்று மாலை சரவணை-தேவபுரம் ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலயத்திற்கு அருகாமையில் சரவணைப் பொதுமக்கள் சார்பிலும் தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள் சார்பிலும் புங்குடுதீவுப்பகுதி எம் பி. யாக தெரிவு செய்யப்பட்ட பண்டிதர் க. பொ. இரத்தினத்துக்கு வரவேற்புகள் அளிக்கப்பட்டன.

## சிறிமா ...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

### துரைரத்தினம் கருத்து

இது சம்பந்தமாக திரு. துரைரத்தினத்திடம் நமது பிரதிநிதி விசாரித்தபோது அவர் பின்வருமாறு தெரிவித்தார்.

திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் அரசாங்கம் கடந்தகாலவகுப்புவாதத்தைக் கைவிட்டு, உண்மையான சோஷலிஸக்கொள்கையைக் கடைப்பிடிக்குமானல், அதனல் தமிழ் மக்களுக்கு நன்மை கிடைக்குமானல் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை தமிழ்பேசும் மக்கள் ஆதரிப்பதற்கு எது விதமான தடையுமிருக்க மாட்டாதென்பதே எனது கருத்து.

வகுப்புவாதத்தை ஒழித்துக்கட்டுவதற்கும், திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. ஆர். ஜி சேனநாயக்கா போன்ற வகுப்புவாதிகளைத் தென்னிலங்கை மக்கள் அரசியலிலிருந்து ஒதுக்கித்தள்ளி விட்டதால் திருமதி சிறிமா அரசாங்கமும் வகுப்புவாதத்தை ஒழித்துக்கட்டுமென்றே நம்புவோம்.

சோஷலிஸம் தேசியமயம் என்பது. கடந்தகாலத்தில் சிங்களசோஷலிஸம், சிங்களதேசிய மயம் என்றே செயல்பட்டுவந்திருக்கிறது இனி அந்த நிலையை இந்த அரசாங்கம் மாற்றிவிடுமென்று எதிர்பார்ப்போம்

தேசீய ஒற்றுமையைநான் ஆதரிக்கிறேன். உண்மையான சோஷலிஸத்தை ஆதரிக்கிறேன்.

எதிர்க்கட்சியில் ஒருதனிக் குழுவாகவேதங்கள் கட்சி இயங்குமென்றும் திரு. துரைரத்தினம் தெரிவித்தார்.

## அந்தோனியார் திருநாள்

ஊர்காவற்றுறை, செவ் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் தேவாலய திருநாள் நேற்றுத் தொடக்கம் ஆரம்பமாகி இம்மாதம் 13-ந் தேதியுடன் முடிவடையும். இவ்வாண்டு 150 ஆண்டுகள் நிறைவுதினமாக உள்ளது.

## நீரில் மூழ்கி மரணம்

ஊர்காவற்றுறை, செவ். நாரந்தனையைச் சேர்ந்த நீக்கிலாப்பிள்ளை சவிரிமுத்து குளிக்கச்சென்ற போது குளத்துநீரில் மூழ்கி மரணமானர். 65 வயதான இவர் நாட்டுக்கூத்து ஆசிரியராவார்.


## உற்சவம்

ஊர்காவற்றுறை, செவ். புளியங்கூடல் மகாமாரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 5-ந் திகதிஆரம்பமாகி ஒன்பது நாட்களுக்கு நடைபெறும்.

## 3 விக்கிரகங்கள் பறிமுதல்

சென்னை, ஜூன். 2 வெளிநாட்டுக்குக் கடத்தத் திட்டமிடப்பட்டிருப்பதாகக் கருதப்படும் 3 விக்கிரகங்களை சென்னையில் வைத்துப் பொலிசார் கைப்பற்றினர்.

## இசை அரங்கேற்றம்



அளவையூர் செல்வன் திலகேஸ்வரனின் இசையரங்கேற்றம் 3-6-70 புதன்கிழமை பிற்பகல் 6 மணிக்கு யாழ்நகர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

2290

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org